விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 07 புதன்கிழமை (23.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD, VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-3041)

# இராணுவ பிடியிலிருந்து காணிகளை விடுவியுங்கள்

## நல்லிணக்கத்துக்கு அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ள அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் ஏமி சீரைட், விசாரணைகளின் போதான சந்தர்ப்பங்களில் இலங்கை அரசு நல்லிணக்கத்துடன் நம்பகமான நீதிப் பொறிமுறைக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## வான்வழி மூலமாக கொழும்புத் துறைமுகம் கண்காணிக்கப்பட்டது

(கொழும்பு)

பலன் பெறும் வகையில் நிலத்தை முகாமைத்துவப்படுத்தும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு துறைமுகம் நேற்று வான் வழி மூலமாக கண்காணிக்கப்பட்டது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணது

23ஆம் பக்கம் பார்க்க....

## குரோதப் பேச்சு; தடைச் சட்டமூலம்

(கொழும்பு)

குரோதப் பேச்சுக்களைத் தடைசெய்யும் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்துக்கு பரிந்துரை வழங்கியுள்ளது.

இனவாத, மதவாத கருத்துக்கள் மூலம் எந்தவொரு இன, மதப்பிரிவினருக்கும் எதிரான கருத்துக்களை

23ஆம் பக்கம் பார்க்க....

## மீன்பிடித் தடையை நீக்குமாறு ஐரோ. பாராளுமன்றில் கோரிக்கை

### அமைச்சர் அமரவீர தகவல்



(கொழும்பு)

ஐரோப்பிய மீன்பிடி தடைக்கு அரசியல் காரணங்கள் சில ஏதுவாய் அமைந்ததாகவும் இலங்கைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய மீன்பிடி தடையை நீக்குவதற்கான

23ஆம் பக்கம் பார்க்க....

## பெண்கள், இளைஞர்கள் பிரதிநிதித்துவம் பேரவையில் உள்வாங்கப்பட வேண்டும்

### தமிழ் மக்கள் பேரவையிடம் தமிழ் சிவில் சமூகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் செயலுருப்பெற்றுள்ள தமிழ் மக்கள் பேரவையை வரவேற்றுள்ள தமிழ் சிவில் சமூக அமையம், இப்பேரவையில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்பட வேணடும் என வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவ் அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக வழி நடத்தும் பொருட்டும் அதனை மக்கள் மயப்படுத்தும் பொருட்டும் சிவில் சமூகக் குழுக்கள், அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி கடந்த 19 டிசம்பர் 2015 அன்று உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை

23ஆம் பக்கம் பார்க்க....

# மீன்பிடித் தடையை நீக்குமாறு

## ஐரோ. பாராளுமன்றில் கோரிக்கை

### அமைச்சர் அமரவீர தகவல்



(கொழும்பு)

ஐரோப்பிய மீன்பிடி தடைக்கு அரசியல் காரணங்கள் சில ஏதுவாய் அமைந்ததாகவும் இலங்கைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய மீன்பிடி தடையை நீக்குவதற்கான

23ஆம் பக்கம் பார்க்க....

# பெண்கள், இளைஞர்கள் பிரதிநிதித்துவம் பேரவையில் உள்வாங்கப்பட வேண்டும்

## தமிழ் மக்கள் பேரவையிடம் தமிழ் சிவில் சமூகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் செயலுருப்பெற்றுள்ள தமிழ் மக்கள் பேரவையை வரவேற்றுள்ள தமிழ் சிவில் சமூக அமையம், இப்பேரவையில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்பட வேணடும் என வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவ் அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக வழி நடத்தும் பொருட்டும் அதனை மக்கள் மயப்படுத்தும் பொருட்டும் சிவில் சமூகக் குழுக்கள், அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி கடந்த 19 டிசம்பர் 2015 அன்று உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை

23ஆம் பக்கம் பார்க்க....

## வட.கிழக்கில் காணாமல்போனோர் உள்ளடங்கலான

# ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் ஜனவரியில் கையளிப்பு

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பில விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச் டப்ளியூ குணதாச தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வடக்கு மற்றும் கிழக்கின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட ஆணைக்குழுவின் அமர்வுகளில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களும் இதில் உள்ளடக்கப்படவுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செயயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ.குணதாச குறிப்பிட்டார்.

ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ள குறித்த அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில

23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் மக்கள் பேரவை

## கூட்டமைப்புக்கு எதிரானதல்ல

### இணைத்தலைவர் ரி.வசந்தராசா விளக்கம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவை உருவாக்கமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானது அல்லவென அப்பேரவையின் இணைத்தலைவர் ரி.வசந்தராசா தெரிவித்தார்.


இதேவேளை, இப்பேரவையானது ஒரு அரசியல் கட்சி இல்லையென்பதுடன், இனியும் அரசியல் கட்சியாக மாறப்போவதில்லையெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் நேறறு ஊடங்களுக்கு தெரிவித்த அவர்,

தமிழ் மக்கள் பேரவையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிலர் கூறுகின்றனர்.ஆனால், இப்பேரவை கூட்டமைப்புக்கு எதிராக ஆரம்பிக்கப் படவில்லை.

23ஆம் பக்கம் பார்க்க....

# வயல் நிலங்களுக்குள் மிதிவெடிகள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெட்டாங்கேணி எனும் கிராமத்தில் பொதுமக்களின் வயல் நிலங்களுக்குள் அகற்றப்படாத நிலையில் பல மிதிவெடிகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் பலர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

# சுற்றாடல் வளங்களைப் பாதுகாக்க முப்படையினரை பயன்படுத்த திட்டம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

வனப்பகுதி, கரையோரப் பகுதிகள் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு எதிர்காலத்தில் முப்படைகளின் ஒத்துழைப்புக் களைப் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து சுற்றாடல் பாதுகாப்பு நிறுவன அதிகாரிகள் மற்றும் சூழலியலாளர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக

24ஆம் பக்கம் பார்க்க....



# நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொருளியற் கல்லூரி

நாவலர் ரோட், யாழ்ப்பாணம் — K.K.S ரோட், இணுவில்.

**(இரு இடத்திலும்)**

**A/L 2018**

**கலை-வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம்:-02.01.2016

சனிக்கிழமை

நேரம்:-8.00a.m

- நீங்கள் நன்கு அறிந்த எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
- உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(சி-3044)

**Note:—**
எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் இதே திகதியில் A/L 2018 ஆரம்பமாகின்றன.




இலங்கை சிறைகளில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி லண்டனில் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பில் பிரித்தானியப் பிரதமர் வாயிலதளத்தின் முன் இக்கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது.


## தவறவிடப்பட்டுள்ளது

யோகராசா நிசாந்தன் என்பவரது கடவுச்சீட்டு (Passport) முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த NC-1127 இலக்கமுடைய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை இரவு தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அனு புடவையகம்,
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
0771579457, 0771310102 (சி-3049)

## If you want to be a qualified PHARMACIST?

**மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை**

21 வயதுக்கு மேற்பட்டவர்கள், கல்வித்தகைமைகள் G.C.E O/L ஆங்கிலப் பாடத்தில் சாதாரண சித்தி G.C.E A/L ஒரே தடவையில் விஞ்ஞானப் பாடங்களில் (இரசாயனம் உட்பட) சாதாரண சித்தி, தற்போது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது. நீங்களும் மருந்தாளராக வர விரும்பினால்

**தொடர்பு:-மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) கொமர்சல் வங்கிக்கு அருகாமையில்)**
**464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:-0776256292** (சி-2953)


## கண்ணீர் அஞ்சலி



பிரம்மஸ்ரீ

## விஸ்வநாத ஐயர் ஜம்புநாதன்

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையத்தை ஸ்தாபிப்பதற்கு உறுதுணையாக இருந்த மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ
**விஸ்வநாத ஐயர் ஜம்புநாதன்** அவர்கள்
21.12.2015 இறையடி சேர்ந்தார்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-3085)

**மஞ்சத்தடி,**
**இணுவில்.**

**இணுவையூர் V.K. குகானந்தன்**
**தலைவர்**
**ரசிகப் பிரியா சபா.**
**கலைவளர்ச்சி மையம்.**


## கிருஷ்ணா அடகு சேவை

**பதிவு இல.J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014ஆம் ஆண்டு (31.11.2014 இற்கு) முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி (15.01.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2016ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015ஆம் ஆண்டு 31.06.2015இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி (05.01.2016)இற்கு முன்னர் மீட்கவும். மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2016ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900311

உரிமையாளர்:A.S.Surendran
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

(சி-3048)


## மரண அறிவித்தல்

### சங்கபாணி ராஜநாயகி



அச்சுவேலி தெற்கு ஆயத்தவளவைப் பிறப்பிடமாகவும் கல்கிசையை வதிவிடமாகவும் கொண்ட ராஜநாயகி சங்கபாணி அவர்கள் 22.12.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அச்சுவேலி தெற்கு, ஆயத்தவளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, மனோன்மணி தம்பதியரின் இரண்டாவது புதல்வியும், சரசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசம்மா தம்பதியரின் மருமகளும் சங்கபாணியின் அன்பு மனைவியும், கஜாயினி (அவுஸ்திரேலியா), கஜேந்திரன் (கொழும்பு), கோகுலன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கண்ணனின் (அவுஸ்திரேலியா) ஆசை மாமியாரும் சாந்தநாயகி, விமலநாயகி, வாமதேவன், றஜிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமானந்தம், பிரேம்குமார், சாந்தி, நிர்மலன், சாந்தநாயகி (சுசி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.12.2015) காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை பிற்பகல் 1 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று 3 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர்.**
**தொடர்பு:-சு.சங்கபாணி (0776448941)**
**ஆர்.வாமதேவன் (0773023492)** (சி-3082)


தற்போது யாழ்ப்பாணத்தில்

# MBA

**12 months British MBA**

Introductory Rs. 30,000/- Discount

REGISTER BEFORE 10th January 2016

UGC இனால் அங்கீகரிக்கப்பட்டது

- Expert British Lecturers*
- Convenient Study Mode
- Easy payment plan
- Highly Reputed & Affordable

**February 2016 INTAKE NOW ON**

(சி-3081)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna.
T:021 221 9910

HOTLINE
076 669 3683
077 960 3753

info@bcas.lk www.bcas.lk

# வடக்கில் சட்டம் ஒழுங்கு குழுக்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு

## முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சட்ட ஒழுங்கு தொடர்பான குழுக்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் சட்ட ஒழுங்கு பற்றிய குழுக்கள் இதுவரை தொடங்கப்படவில்லை என வடக்கு மாகாண சபையின்41 ஆவது அமர்வில் வட மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி சுட்டிக்காட்டியிருந்தார்.

அவருடைய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சட்டம் ஒழுங்கு பற்றிய குழுக்கள் தொடர்பாக முன்னைய வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்கவிடம் பேசியிருந்தோம். அவர் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்த போது திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். பின்னர் புதிதாக தற்போது வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரை அழைத்து கலந்துரையாடி இது தொடர்பாக விசாரித்தேன். 6, 7 மாதமாக இவ் விடயம் தொடர்பாக பேசியிருந்தோம். அதற்கு முன்னைய பொலிஸ்மா அதிபர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதாக கூறியிருந்தார். நீங்கள் இது தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் என கோரியிருந்தேன்.

இக் குழுக்கள் அமைப்பது தொடர்பாக விசாரித்து ஆராய்ந்து பார்க்க கால அவகாசம் தேவையென எனக்கு கூறியிருந்தார்.

எனவே அடுத்த வருட ஆரம்ப பகுதியில் இருந்து சட்டம் ஒழுங்கு தொடர்பான குழுக்கள் நடைமுறைப்படுத்தப்படுமென நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து உண்ணாவிரதம்

யாழ்.கிளிநொச்சி குடிநீர் சுகாதாரத் திட்டத்தின் கீழ், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடல்பரப்பு கடல் நீரினை எடுத்து நன்னீராக்கும் செயற்றிட்டத்திற்கு முற்று முழுதான எதிர்ப்பை தெரிவித்து வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ள இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் வடமராட்சிக் கிழக்கு கடற்றொழிலாளர்கள், வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பு மற்றும் வடமராட்சி கிழக்கின் பொது அமைப்பு என்பன கலந்து கொள்ளவுள்ளன.

மருதங்கேணி கடற்பரப்பில் இருந்து கடல் நீரினை எடுத்து நன்னீராக்கும் செயற்றிட்டத்தினால்" அப்பிரதேச கடற்றொழிலாளர்களது தொழில் பாதிக்கப்படுவதுடன் கடற்பரப்பில் உள்ள மீன் வளமும் குறைவடையும் என கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மருதங்கேணி கடல் நீரை எடுத்து நன்னீராக்கும் செயற்றிட்டம் முற்றுமுழுதாகக்கைவிடப்பட வேண்டும்.

இத் திட்டத்தினை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரியே இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இன்றையதினம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பினைத் தர வேண்டும் என வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பு கேட்டுள்ளது. (இ-5-60)

# அரசியல் அமைப்பு பேரவை தொடர்பில் ஜனாதிபதி ஜனவரி 9ம் திகதி அறிவிப்பார்

(கொழும்பு)

**அரசியல் அமைப்பு பேரவை குறித்து ஜனாதிபதி எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதி அறிவிக்கவுள்ளார். நாடாளுமன்றை அரசியல் அமைப்பு பேரவையாக மாற்றும் வகையில் யோசனை முன்வைக்கப்பட உள்ளது. இந்த யோசனை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட உள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

# வெலிக்கடை சிறையில் மகிந்த

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்தியதாக சந்தேகிக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்ட 5 இராணுவ வீரர்களையும் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை சென்று பார்வையிட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைககப்பட்டுள்ள இராணுவ வீரர்களில் இருவர் லெப்டினன்கள் மற்றும் சாஜன்கள் உள்ளடங்குவதுடன் இவர்கள் யுத்த காலத்தில் இராணுவ புலனாய்வு சேவைகளை வழங்கியதாக குறிப்பிடப்படுகின்றது. அது தொடர்பான விசாரணைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் குறித்த இராணுவ வீரர்களை சென்று சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஒபாமாவிடம் கம்மன்பில விண்ணப்பம்





இலங்கையின் நிதியமைச்சரான ரவி கருணாநாயக்கவை, ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளராக நியமிக்குமாறு, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம், பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கோரிக்கை விடுத்தார். இதன் மூலம், நேர்மாறான நடைமுறையால், இலங்கை ரூபாயை நிலைப்படுத்த முடியுமென அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர், இவ்வாறு தெரிவித்தார். ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கெதிராக, இலங்கை அரசாங்கம் போராடி வருகின்ற போதிலும், அதற்கான தீர்வு, நீண்ட தூரத்திலல்லாமல், அரசாங்கத்துக்குள்ளேயே இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

"மிதக்கும் நாணயப் பெறுமதிக் கொள்கை காரணமாக, ஜனவரியிலிருந்து, இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்துள்ளது. இதை, அமைச்சர் ரவி கருணாநாயக்க தீர்ப்பதற்கு, நேர்மாறான தீர்வொன்று என்னிடமுண்டு. ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளராக அவரால் வர்முடியுமெனில், ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதியை, இலங்கை ரூபாவின் மட்டத்துக்கு அவரால் கொண்டுவர முடியும்" என அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தை, ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் கலந்துரையாடுமாறு அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தார். (இ)

# சுனாமிப் பேரலை கோர நிகழ்வுகள்

யாழ்.திருமறைக் கலாமன்றம், மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் என்பவற்றின் அனுசரணையுடன் சுனாமி பேரலையின் கோர நிகழ்வுகள் 11 ஆவது ஆண்டு நிறைவுதினம் எதிர்வரும் 26 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.இது தொடர்பான நினைவுதின நிகழ்வு 26 ஆம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பழை துர்க்காபுரம் சிற்பாலயம் கலைக் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது 26 ஆம் திகதி 2004 ஆம் ஆண்டு உலகையே அதிர வைத்த ஆழிப்பேரலை, அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் பூமி அதிர்வுகள், வெள்ளப்பெருக்கு, எரிமலை சீற்றம் மற்றும் தொடந்து வரும் இயற்கை அனர்த்தங்கள், எதிர்வுகூறப்படும் அச்சுறுத்தல்கள் என்பனவற்றுக்கு எவ்வாறு முகம்கொடுப்பது, எப்படி எம்மை பாதுகாப்பது, மீண்டும் எழுவது எப்படி என்ற விளக்கங்கள் அடங்கிய ஆய்வரங்கு அத்துறை சார்ந்தவர்களால் நிகழ்த்தப்படவுள்ளது. (இ-5)

## தங்கம் கடத்த முற்பட்ட

# இஸ்லாம் விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளர் கைது

400 கிராம் தங்க பிஸ்கட்கள் நான்கை கடத்த முற்பட்டதாக கூறப்படும் அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்லாம் ஆகம விவகார அமைச்சின் இணைப்பு செயலாளரே, நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதாகியுள்ளதாக, சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

சிங்கப்பூரில் இருந்து வந்த விமானத்தில் நேற்று அதிகாலை 01.30 அளவில் சந்தேகநபர் நாட்டை வந்தடைந்ததாக, அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

42 வயதான குறித்த சந்தேகநபர் பொறளை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது. (இ)

# பாணந்துறையில் எரிவாயு கசிவு

பாணந்துறை பகுதியிலுள்ள நிறப்பூச்சு உற்பத்தி நிறுவன மொன்றில் ஏற்பட்ட எரிவாயு கசிவினால் ஊழியர்கள் 18 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த எரிவாயு கசிவு தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# ஜனவரி முதல் தனியார் பேருந்துகளில் வர்த்தகம், யாசகத்தில் ஈடுபடத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் தனியார் பேருந்துகளில் வர்த்தகம் செய்வதும், யாசகம் எடுப்பதும் தடை செய்யப்படவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறி வித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் இந்தத் தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, அவ்வாறு அறிவித்துள்ளார். பேருந்துகளின் உள்ளே வர்த்தகம் செய்வோர் மற்றும் பல யாசகம் பெறுவோரை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறான வர்த்தகர்கள் மற்றும் யாசகர்கள் காரணமாக தாம் பெரும் அவதிக்குள்ளாவதாக ஏராளமான பயணிகள் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைக்கு புகையிரதத்தில் யாசகம் எடுப்பது தடை செய்யப்பட்டுள்ள போதிலும் ரயில் நிலையங்களில் யாசகர்களின் தொல்லை தொடர்ந்து கொண்டிருப்பதாக பயணிகள் தெரிவித்துள்ளனர். (இ)


# ஆஸியில் பிக் பாஷ் இருபது-20 தொடர் றோபர்ட் ஹரிகேன்ஸ் அணி வெற்றி

பிக் பாஷ் இருபது-20 லீக் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. நேற்றைய முதல் லீக் போட்டியில் ஹோபர்ட் ஹரிகேன்ஸ்- பிரிஸ்பேன் ஹீட் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற ஹோபர்ட் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது, தொடக்க வீரரும், கப்டன் மற்றும் விக்கெட் கீப்பருமான பெய்னே 58 பந்தில் 87 ரன்கள் குவித்தார். அடுத்து வந்த சங்ககரா 43 ரன்களும், ஜார்ஜ் பெய்லி 40 ரன்களும் எடுத்தனர். அதனால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் ஹோபர்ட் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 184 ரன்கள் குவித்தது.

185 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பிரிஸ்பேன் ஹீட் பேட்டிங்கை தொடங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர்கள் பியர்சன் 29 ரன்களும், சிம்மன்ஸ் 16 ரன்களும் எடுத்து ஆட்டம் இழந்தனர்.

அதன்பின் வந்த புளொரோஸ் 42 ரன்னும், ரியர்டன் 41 ரன்களும் சேர்த்தனர். இருந்தாலும் அந்த அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 164 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணி 20 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)







# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
சக ஆசிரியை
திருமதி கிருஷ்ணகுமாரி
இரவீந்திரன்
அவர்களின்
அன்புத் தந்தையார்


அமரர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்

21.12.2015 காலமாகி விட்டார். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!!! (சி-3084)

கிளி/இராமநாதபுரம்
மகா வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்


# தென்னாபிரிக்காவுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி




இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப் பயணம் செய்துள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் டர்பனில் 26ஆம் திகதி தொடங்குகிறது. அதற்கு முன்பு அந்த அணி இரண்டு பயிற்சி ஆட்டத்தில் ஆட முடிவு செய்தது.

அதன்படி 2-வது பயிற்சி ஆட்டம் பீட்டர்மார்ட்டிஸ்பர்க்கில் ஆரம்பமாகியது. தென்னாபிரிக்கா 'ஏ' அணிக்கெதிராக நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் கப்டன் குக் பீல்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த தென்னாபிரிக்கா அணி முதல் இன்னிங்சில் 136 ரன்னில் சுருண்டது. இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் பின் 4 விக்கெட்டும், சகல துறை வீரர் பென் ஸ்டோக்ஸ் 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள். அதன்பின் இங்கிலாந்து முதல் இன்னிங்சை தொடங்கியது. குக் (126), ரூட் (117) ஆகியோரின் சதத்தால் அந்த அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 414 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

278 ரன்கள் பின்தங்கிய நிலையில் தென்னாபிரிக்கா அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் தென்னாபிரிக்கா 'ஏ' அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென வீழ்ந்தன. இதனால் அந்த அணி 187 ரன்னில் சுருண்டது. இதனால் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 91 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தென்ஆப்பிரிக்கா 'ஏ' அணியின் டி காக் அதிகபட்சமாக 53 ரன்கள் சேர்த்தார். மொயீன் அலி 14.5 ஓவர்கள் வீசி 77 ரன்கள் மட்டும் விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தி வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

பயிற்சி ஆட்டத்தில் சிறப்பாக செயல்பட்டதால் 26ஆம் திகதி தொடங்கும் முதல் டெஸ்டில் சிறப்பாக விளையாட முடியும் என இங்கிலாந்து நம்புகிறது. (க)




# மரண அறிவித்தல்

## நடராஜா ஞானமணி

(ஓய்வுபெற்ற அதிபர்) (மண்டைதீவு)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல 382/3 நாவலர் ஒழுங்கை நாவலர் வீதி ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஞானமணி *(22.12.2015)* செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துமணி, ஞானலிங்கம் மற்றும் செல்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிறேமதாசா, நிறைமதி (ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயாரும், பகீரதன், பரணீகரன், யசோதரன், சர்மிளா, காலஞ்சென்ற கௌசலா மற்றும் கெங்ககுமார், தேன்மொழி, அருள்மொழி, தெய்வகுமார் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

382/3 நாவலர் ஒழுங்கை,
நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந.செல்வலிங்கம்
0777609933
ஞா.பரணீகரன்
0770562621

## மனநலம் பாதித்த இளம் பெண் மீது பலாத்காரம்;7பேருக்கு மரணதண்டனை

நேபாளத்தை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளம் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த குற்றவாளிகள் 7 பேருக்கு ஹரியாணா நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நேபாளத்தை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளம் பெண். தன் சகோதரியுடன் ஹரியாணா மாநிலம் ரோதக்கில் உள்ள சின்யாத் காலனியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தார். கடந்த பெப்ரவரி முதலாம் திகதி வீட்டை விட்டு வெளியே சென்ற அந்த இளம்பெண் வெகுநேரமாகியும் வீடு திரும்பவில்லை. இது தொடர்பாக அவரது சகோதரி பொலிஸில் புகார் அளித்திருந்தார்.

இந்த சூழலில் பெப்ரவரி 4ஆம் திகதி பாஹு அக்பர்பூர் என்ற கிராமத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். பிரேத பரிசோதனையில் அந்த இளம் பெண்ணை, மர்ம கும்பல் பாலியல் பலாத்காரம் செய்து, மர்ம உறுப்புகளில் கூரான கற்களை கொண்டு கொடூரமாக தாக்கி சித்ரவதை செய்து கொலை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து மனிதாபிமானமற்ற முறையில் கொடூர செயலில் ஈடுபட்ட அந்த குற்றவாளிகள் 7 பேருக்கும் ரோதக் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேலும், தீர்ப்பு வழங்கும்போது, மிக அரிதான வழக்கு என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (இ)

## புகையிலைச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

(கரணவாய்)

வடமராட்சி விவசாயிகள் புகையிலை நாற்று நடுகை மற்றும் வெங்காயச் செய்கை போன்ற பயிர்ச் செய்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மழை பெய்து ஓய்ந்ததையடுத்து விவசாயிகள் தமது விவசாய நிலங்களை சீர்படுத்தி பசளையிட்டு பயிர்ச்செய்கைக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

இதற்கமைய வடமராட்சியில் மந்திகை, நாவலர் மடத்தடி,குஞ்சர் கடையடி, இமையாணன் , புளியடி போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகள் இப்பயிர்ச் செய்கையில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5-60)


**குத்தகைக்கு**

மேட்டு பயிர் செய்யத்தக்க பத்து ஏக்கர் காணி (நயினாமடு நெடுங்கேணியில்) வீடு கிணறு, மின்சார வதியுடன் கூடியது. குத்தகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0775024412**
(2936)

**டயானா பிளாஸ்டிக் மீள்சுழற்சி**

**பழைய பொலித்தீன் மற்றும் பழைய பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்.**

**TP: 021 222 8680,**
**077 592 5088**
(சி-3042)

# கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்** 1938.06.03 **மறைவு** 2015.12.21



## கந்தப்பு சாவித்திரிதேவி

நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாக்வும் வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.வி.எம்.நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளர் கந்தப்பு ராஜசேகரம் அவர்களின் அன்புத் தாயார் கந்தப்பு சாவித்திரிதேவியின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்க்ளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**உரிமையாளரும், ஊழியர்களும்**

122, டாம் வீதி, கொழும்பு-12

**S.V.முருகேசு**

154, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

(2952)


## ராசி பலன்

**23.12.2015**

(மார்கழி 07, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு,
திரயோதசி முன்னிரவு 8.04 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 2.39 மணிவரை
இராகுகாலம் 12.25-1.55 மணிவரை
சுபநேரம் 4.55-6.25 மணிவரை
பிரதோச விரதம்,அமிர்தசித்தம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை, சுவாதி | | |
| சூரி புத | சனி | சுக் | ராகு செவ் குரு |

**மேடம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியமென்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், தொலைபேசி வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்** சிறப்பான நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** நண்பர்களிடையே நிலவிய கசப்புணர்வு நீங்கும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்க்கும் நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், கடன் பிரச்சினையை மாற்றி அமைப்பீர்கள், தடைகள் எடுபடும் நாள்.

**மகரம்** பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுப்பீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

# 2016ஐ போதைப்பொருளுக்கு எதிரான ஆண்டாக அறிமுகப்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாண சபையிடம் உறுப்பினர் சுகிர்தன் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**எதிர்வரும் 2016 ஆம் ஆண்டை போதைப் பொருளுக்கு எதிரான ஆண்டாக வடக்கு மாகாண சபை பிரகடனப்படுத்த வேண்டுமென உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

வடக்கு மாகாண கல்வியமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மீதான விவாதத்தில் சுகிர்தன் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் போர் உச்சம் கொண்ட காலத்திலும் போதைப்பொருளுக்கு அடிமையாகாத எமது வடக்கு மாகாணம் தற்போது அடிமையாக எத்தனிக்கின்றது.

இதற்கு காரணம் போதைப் பொருள் பாவனையாளர்கள் உச்ச அளவில் தண்டிக்கப்படாமையே.



தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் போதைப்பொருள் விற்பனையாளர் மற்றும் பாவனையாளர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. அதனால் அப்போது போதைப்பொருள் பிரச்சினை என்பது பெரிதாக இல்லை.

தற்போது பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு அனைவரிடமும் போதைப்பொருள் பாவனை தலைதூக்கியுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு அடுத்த வருடம் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபை மேற்கொள்ள வேண்டும்.

இதனை நாமும் கண்டுகொள்ளாமல் விட்டால் மாணவர்களின் கல்வி மேலும் பாதிக்கப்பட்டு நாம் மேலும் வீழ்ச்சியை எதிர்நோக்க வேண்டி வரலாம்.

ஆகையால் அடுத்த வருடத்தை போதைப்பொருளுக்கு எதிரான ஆண்டாக வடக்கு மாகாண சபை பிரகடனப்படுத்தி உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வட மாகாண சபை உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)




# தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறையால் அவதி

## மாகாணசபை உறுப்பினர் அனந்தி சுட்டிக்காட்டு

தெல்லிப்பழை வைத்தியசாலையில் போதிய ஆளணி மற்றும் புற்றுநோயாளர்களுக்குரிய போக்குவரத்து வசதி என்பன பற்றாக்குறையாக உள்ளதாக வடக்கு மாகாண சபையில் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் கட்டுக் கோப்பாக இருந்த கலாசாரம் தற்போது சீரழிந்து வருவதாகவும் சுட்டிக்காட்டிய அவர் இதனைத் தடுப்பதற்கு கலாசாரத்திற்கான குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான சுகாதார, கல்வி அமைச்சின் மீதான பாதீட்டு விவாதத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

தெல்லிப்பழை வைத்தியசாலையில் போதிய சிற்றூழியர், தாதியர்கள், வைத்தியர்கள் இல்லை.

இதனால் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குவதோடு அங்கு



பணி யில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் வேலைச்சுமையை எதிர்கொள்கின்றனர்.

இதனைவிட தெல்லிப்பழையில் சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குமென மாறி மாறி பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இந்தப் போக்குவரத்திற்கு அம்புலன்ஸ் வசதிகள் மிகக்குறைவாக காணப்படுவதனால் அநேகமான நோயாளர்கள், பயணிகள் பேருந்தையே நாடுகின்றனர்.

இவ்வாறு நோயாளர்களும் உத்தியோகத்தர்களும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனை வடக்கு மாகாண ச்பையின் சுகாதார அமைச்சு உடனடியாக கருத்திலெடுத்து செயற்பட வேண்டும். அடுத்து எமது தாயகத்தில் கலாசாரம் சம்பந்தமான சமூகப் பிறழ்வுகள் அதிகரித்து காணப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் நடுச்சாமத்தில் கூட ஒரு பெண்ணால் நடமாட முடிந்தது.

ஆனால் தற்போது நண்பகலில் கூட தனியே செல்லமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இதனை பொலிஸாரே ஒப்புக்கொள்கின்ற னர்.

தனியார் கல்வி நிலையங்கள் கட்டுப்பாடின்றி இரவு வேளையிலெல்லாம் நடைபெறுகின்றன. இவற்றை வடக்கு மாகாண சபை கல்வியமைச்சு கவனத்திலெடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் பேணிப்பாதுகாக்கப்பட்ட எமது கலாசாரம் தற்போது சீரழியாமல் இருப்பதற்கு அந்த அதிகாரத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சபையிலெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன

## வடக்கு எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு



வடக்கு மாகாண மாணவர்களின் கல்விப் பொதுத்தராதர பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, உடனடியாக இது தொடர்பில் விசேட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வியமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு மீதான விவாதத்தின் போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் தேசிய ரீதியில் முன்னிலை பெற்றுவந்த எமது மாணவர்களின் பரீட்சை முடிவுகள் தற்போது வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தர பெறுபேறுகளில் எமது மாகாணம் தேசிய ரீதியில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

எமது மாணவர்களின் கல்வி மட்டத்தை உயர்த்த உடனடியாக செயற்றிட்டமொன்றை கல்வியமைச்சு மேற்கொள்ளவேண்டும்.

பாடசாலைகளில் காணப்படும் மலசலகூடங்கள் பாவனைக்குதவாத வகையில் காணப்படுகின்றன.

குறும்படம் தயாரிப்பு என்ற போர்வையில் பல பாலியல் செயல்கள் அரங்கேற்றப்படுகின்றன.

கலாசார குழு என்று கூறிக்கொண்டு சிலர் திரிகின்றனர். இவர்களை சட்டத்திற்குட்பட்டு கையாள வேண்டும் எனப் பல அறிக்கைகளை தவராசா முன்வைத்தார். (இ-4)

# தொழிற்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்.மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை. நடத்தி வருகின்றது.

வீட்டு மின் இணைப்பாளர் மற்றும் தொழிற்சாலை மின்னிணைப்பாளர் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கற்கை நெறிகள் சண்டிலிப்பாய், கைதடி, காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. கற்கைநெறிகள் அனைத்தும் தேசியதொழில்தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.


இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணம் முதலாம் மாடி வீரசிங்கம் மண்டபத்திலுள்ள மாவட்ட அலுவலகத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜேசுரேஸ் குமார் அறிவித்துள்ளார். (இ-5)

# வாழ்வின் எழுச்சி வங்கிகளின் முகாமையாளர்கள் பகிஷ்கரிப்பு

பிரதேச செயலகங்களுக்குட் பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிமுகாமையாளர்கள் அனைவரும் நேற்றைய தினம் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந் தனர்.

சம்பள உயர்வு, பதவியுயர்வு, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை அடிப்படையாக வைத்தே மேற்குறித்த வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் முகாமையாளர்கள் இவ் வேலை நிறுத் தப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.



எனினும் அனைத்து வங்கிகளிலும் மக்களுக்குரிய சேவைகள் அனைத்தும் வங்கி உதவி முகாமையாளர் ஊடாக இடம்பெற்றுள்ளது.

முகாமையாளர்கள் தமது ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் தமக்கு பதில் கடமைகளுக்காக உதவி முகாமையாளர்கள் நியமித்து தமது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

# செல்வச்சந்நிதியில் அறநெறிப் பாடசாலை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபையால் அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் அறநெறி வகுப்புக்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 4 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் நடைபெற்று வருகின்றன.

ஆர்வம் உள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இவ்வகுப்புக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# தமிழ் மக்கள் பேரவை காலத்தின் கட்டாய தேவை



பாவத்தை பார்த்திருப்பதும் பாவம் என்றார் மார்ட்டீன் லூதர் கிங். அவரின் தத்துவம் சாதாரணமானதல்ல. இன்று எங்கள் மண்ணில் பாவம் மலிந்து விட்டது. நீதிக்காக குரல் கொடுப்பதற்கு எவரும் இல்லை என்ற மிக மோசமான நிலை தோன்றி விட்டது.

நமக்கென்ன என்று பேசாமல் இருப்பதுதான் மிகப்பெரும் மோசமான நிலைமை என்பதை தமிழ் மக்கள் உணர்ந்தாக வேண்டும். எவரும் எப்படியும் கதைக்கலாம், பேசலாம் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

இத்தகையதோர் சூழமைவில் தமிழ்மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்விக்கான விடை கிடைப்பதாக இல்லை.

நீதிக்காக, உண்மைக்காக, தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு மனிதநேயமுள்ளவர்கள் முன்வந்தால் அவர்களை அடக்கி முடக்கி அந்தப் பணியில் இருந்து வெளியேற்றிவிடுவதில் சிலர் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

தத்தம் சுயநல இருப்பை தக்க வைப்பதற்காக சிலர் செய்கின்ற காரியங்கள் கண்டு நெஞ்சு வெடித்து விடுகிறது. நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைந்து விட்டால் என்று பாரதி கவலையோடு பாடியிருக்கிறான் எனில் நிலை கெட்ட போக்குகள் கண்டு பாரதி பட்ட வேதனையின் வெளிப்பாடுதான் அது என்பதை உணர முடியும்.

மண் மீட்புக்கான விடுதலைப் போராட்டத்தின் முடிவும் இழப்பும் வேதனையும் என்றாகிவிட்டது.

ஒட்டுமொத்தத்தில் தமிழினத்தின் விடிவுக்காக-வாழ்வுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்களின் குடும்பங்கள் இன்று சொல்லொணாத் துன்பத்தில் வாடுகின்றனர்.

அண்மையில் புற்றுநோயால் உயிரிழந்து போன தமிழினியின் குடும்பத்தின் வறுமை நிலை எத்தனை பேருக்குத் தெரிந்திருந்தது.


விடுதலைப்புலி அமைப்பு இப்போதும் இருந்து மகளிர் பிரிவின் பொறுப்பாளராக தமிழினி இருந்திருந்தால் தமிழினியின் வீட்டுப்பூனை செத்திருந்தாலும் மலர் வளையம் வைக்க நம்மவர்கள் பலர் முண்டியடித்திருப்பர்.

ஆக, தத்தம் பதவிகளுக்கும் வருமானத்திற்கும் அரசியலுக்குமாகப் பந்தம் பிடிக்கின்ற கலாசாரம் இப்போது மேலோங்கி விட்டது.

தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு என்ற விடயம் ஒரு சிலருக்கானது என்றவாறு அவர்களின் கைகளில் உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு எது என்பதை தமிழ்மக்களே தீர்மானிக்க வேண்டும். தேர்தல் காலத்தில் தமிழ் மக்களிடம் தேடிவந்து எங்கள் தமிழ் மக்கள் புத்திசாலிகள்.


அவர்களுக்கு யாருக்கு வாக்களிப்பது என்பது நன்கு தெரியும். அவர்களை யாராலும் ஏமாற்ற முடியாது என்று கூறுகின்ற பெரியவர்களே! தமிழ் மக்களை யாராலும் ஏமாற்ற முடியாது என்று நீங்கள் கூறுகின்ற அந்த வார்த்தைதான் அவர்களை ஏமாற்றுகின்ற முதல் வார்த்தை என்பதை அப்பாவித் தமிழ்மக்கள் உணர முடியாதவர்களாக இருக்கின்றனர்.

தமிழ்மக்கள் புத்திசாலிகள் என்றால் நீங்கள் தயாரித்த தீர்வுத் திட்டத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லாதது ஏன்? உங்கள் அத்தனை நடவடிக்கைகள் அனைத்திலும் வெளிப்படைத்தன்மை இல்லாதது ஏன்? எங்களை யாரும் எவரும் எதுவும் கேட்க முடியாது என்று கருதி விடுகிறீர்கள். உங்களின் கருத்து நிலையை யார் விமர்சிக்க முற்பட்டாலும் அவர்களை ஏதோவொரு வகை



யில் நசுக்கி விடுகிறீர்கள்.

கடந்த 19.12.2015 சனிக்கிழமை அன்று மதத் தலைவர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகள், வடக்கின் முதலமைச்



சர் ஆகியோர் ஒன்றுகூடி தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் நலன் பேணும் அமைப்பை உருவாக்கினர்.

இந்த அமைப்புக்கு மாற்று அரசியல் தலைமை என்றும் புதிய கட்சி என்றும் சிலர் விசனமாகப் பிரசாரம் செய்தனர்.

தமிழ்மக்கள் பேரவை என்ற அமைப்பினர் மிகத் தெளிவாக தங்களின் நோக்கத்தை வெளிப்படுத்தியிருக்கும்போது, வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் பேரவை பற்றி வெளிப்படையாகக் கூறியிருக்கும் போது அதை மீறிப் பிரசாரம் செய்வதனுடைய நோக்கம் என்ன? மதத்தலைவர்கள், வடக்குக் கிழக்கின் சமூகப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தமிழ்மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கான ஒரு அமைப்பை உருவாக்கியுள்ள போது அதன் பணி என்னவாக இருக்கிறது என்று அவதானிப்பதுதானே நியாயமானது.

இதைவிடுத்து தமிழ் மக்கள் பேரவை மாற்றுத் தலைமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கும் திட்டம் என்றெல்லாம் ஒப்பாரிவைப்பதற்குள் ஏதேனும் நியாயம் இருக்கிறதா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வீரகேசரிப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில்; மக்கள் சார்பான ஜனநாயக செயற்பாடுகளை வரவேற்கின்றோம். அதேசமயம் கட்சியின் கொள்கை கோட்பாடுகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவும் ஜனநாயகம் பேணிப்பாதுகாக்கப்படவும் வேண்டும் என்பதில் நாமும் உறுதியாகவே இருக்கின்றோம். விசுவாசமான நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். அனைவரும் கருத்துக்களை வெளியிடுவதற்கு உரிமையுள்ளவர்கள்.

மக்கள் சார்பான மற்றும் ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தரின் இக்கருத்து அவரின் ஆழ்ந்த அறிவின் வெளிப் பாடாகும். ஒரு அனுபவமுள்ள அரசியல் தலைவர் இந்தக் கருத்தையே சொல்ல வேண்டும்.


ஒரு அமைப்பு உருவாகினால் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். அதன் பணி என்னவென்று அறிய வேண்டும்.

அதுவே நீதியும் நியாயமு மாகும். இதைவிடுத்து கூப்பாடு போடுவது பயத் தின் வெளிப்பாடாகவே இருக்க முடியும்.

**விதுரன்**

# மீள்குடியேற்றப்பட்டதில் இருந்து இன்றுவரை அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றோம்

## சேமமடு கிராம மக்கள் ஆதங்கம்





வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சேமமடு கிராமத்தில் மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

யுத்தம் முடிவுற்று ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அம்மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சேமமடு பிரதான வீதி இறுதியாக 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருத்தப்பட்டு இதுவரை காலமும் புனரமைக்கப்படவில்லை எனவும் இதனால் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சிறு வீதிகள் 2002 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட போதும் மழைகாலங்களில் பயணிக்க முடியாதுள்ளதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

1991 ஆம் ஆண்டு சேமமடுவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து 350 குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றதாகவும் பின்னர் 2002 ஆம் ஆண்டு மீண்டும் சொந்த இடங்களிற்கு திரும்பியதாகவும் குறிப்பிட்டனர். இதனை தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் மீண்டும் இடம்பெயர்ந்து 2010 ஆம் ஆண்டு 150 குடும்பங்கள் வரை மீள்குடியேறியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்டதில் இருந்து இன்று வரை தமக்கு சீற் நிறுவனத்தால் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தற்காலிக வீடு கட்டிக் கொடுக்கப்பட்டதாகவும், நிரந்தர வீட்டுத்திட்டத்திற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.(2-281)

# ரயில் மோதி ஒருவர் பலி

(குருமன்காடு)

வவுனியா நேரியகுளம் பகுதியிலுள்ள புகையிரத பாதையில் தூங்கிக் கொண்டிருந்த நபர் ரயில் மோதி பலியானார்.

மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி நேற்று முன்தினம் சென்ற ரயில் மோதியே அவர் உயிரிழந்துள்ளார்.

நேரியகுளத்தைச் சேர்ந்த எஸ்.துரைச்சாமி என்ற சுமார் 47 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு ரயிலில் மோதுண்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபருடன் சென்ற மற்றொருவர் ரயில் பாதைக்கு அருகில் தூங்கிக்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-250)




# இரண்டு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தது

(தண்ணீருற்று)

இருநபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒருவர் மற்றையவரின் முகத்தில் கத்தியால் குத்தியுள்ளார்.

இதனையடுத்து அவர் பாரிய கத்திக் குத்துக்கு இலக்காகிய நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு தற்போது இல.14விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் மாமூலை தண்ணீரூற்று முள்ளியவளையைச் சேர்ந்த ரவீந்திரன் அரவிந்தன் (வயது-35) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே கத்திக்குத்துக்கு இலக்கானவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் வீட்டிற்கு வெளியே நின்ற சமயம் பிறிதொரு நபருடன் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறி முகத்தில் கத்திக் குத்து இடம்பெற்றது.

இந்நிலையில் கத்திக்குத்துக்கு இலக்கான குடும்பஸ்தர் முகத்தில் கத்தி குத்தப்பட்டவாறு மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.சம்பவம் அறிந்த முள்ளியவளை பொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டனர். (2-292)

# மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(வவுனியா)

வவுனிக்குளம் பாலிநகர் இலங்கை தொழில் பயிற்சி நிலையத்தில் 2016ஆம் ஆண்டு அரையாண்டுக்குரிய தொழில் பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்காக (NVQ Level) புதிய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல், தையல் பயிற்சி, மின்னிணைப்பு ஆகியன இடம்பெறவுள்ளன. இதற்கான முடிபுத் திகதி 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதியாகும். துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இருந்து மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் கணனி கற்கைநெறிக்கு முன்பள்ளி ஆசிரியர்களையும் இணைத்துக்கொள்ள முன்னுரிமை வழங்கப்படுமென மேற்படி நிலைய பொறுப்பதிகாரி செ.திருக்குமரன் அறிவித்துள்ளார். (2)

# வெள்ளைச் சீருடைத் துணிகளை வழங்காது பட்டசில்க் தரத்திலான துணிகள் விநியோகம்

## மேலதிகமாக 60 ரூபா பணமும் அறவிடப்படுவதாக பெற்றோர் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களில் உள்ள மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை விநியோகம் செய்யும் சில வர்த்தக நிலையங்கள் வலயக்கல்வி அலுவலகங்களினால் அறிவுறுத்தப்பட்ட வெள்ளைச் சீருடைத் துணிகளை வழங்காது பட்டசில்க் தரத்திலான வெள்ளைத்துணியை வழங்குவதுடன் சீருடைத் துணிக்கான பணவவுச்சரை விட 60 ரூபா பணம் கூடுதலாக அறவிடப்படுவதாகவும் பெற்றோர், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி விநியோகத்திற்குப் பதிலாக பணவவுச்சர்கள் வழங்கப்பட்டு அதனைக் கொண்டு மாணவர்களினது பெற்றோர் தனியார் வர்த்தக நிலையங்களில் சீருடைத் துணிகளைக் கொள்வனவு செய்வதற்கு கல்வித் திணைக்களங்களினால் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு,முள்ளியவளையிலும் மற்றும் வவுனியா நகரப்பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் வலயக் கல்வி அலுவலகத்தினால் அனுமதிக்கப்பட்ட மாதிரி சீருடைத் துணிக்குப் பதிலாக பட்டசில்க் துணி சீருடைத் துணியாக விநியோகிக்கப்படுகின்றது.

அத்துடன் சீருடைத்துணி கொள்வனவிற்கான பணவவுச்சரில் குறிப்பிடப்பட்ட பணத் தொகையை விட மேலதிகமாக 60ரூபா பணம் அறவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக முள்ளியவளை நகரப்பகுதியிலுள்ள சீருடைத்துணி விநியோகம் செய்யும் இரு வர்த்தக நிலையங்களில் இவ்வாறான முறைகேடுகள் அதிகமாக நடைபெறுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே சீருடைத்துணி விநியோகம் செய்யும் விற்பனை நிலையங்கள் தொடர்பில் திடீர் ஆய்வுகளை வலயத்திணைக்கள கல்வி அதிகாரிகள்மற்றும் துறைசார்ந்த பிரிவின் ஏனைய கல்வி அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும் எனவும் பட்டசில்க் துணியை பெற்றுக் கொண்ட மாணவர்களிடம் இருந்து அதனை விநியோகம் செய்த வர்த்தக நிலையங்கள் ஊடாக மீளப்பெறப்பட்டு தரமான சீருடைத் துணியை மாணவர்களுக்கு கிடைக்க ஆவண செய்ய வேண்டுமென மாணவர்களின் பெற்றோர், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# தனிக்கல்லு குளத்தை புனரமைத்து விவசாயம் செய்வதற்கு உதவுங்கள் விவசாயிகள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா வடக்கில் தனிக்கல்லு குளத்தையண்டிய 400 ஏக்கர் விவசாய நிலம் பறிபோகும் அபாயநிலையில் இருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

1965 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட இக்குளம் கடந்த 50 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளது. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரங்களையடுத்து இடம்பெயர்ந்த இப்பகுதி விவசாயிகள் 2010 ஆம் ஆண்டு மீள் குடியேறிய போது குறித்த குளத்தின் கீழான வயற்காணிகள் எல்லையோரத்தில் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவரால் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், மக்கள் தமது காணி ஆவணங்களைக் காண்பித்து அவற்றை அவர்களிடம் இருந்து மீட்டு, நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். 2012 ஆம் ஆண்டு குறித்த குளத்தினை புனரமைப்பு செய்வதாக கூறி விவசாய திணைக்கள பொறியியலாளரால் 10 மில்லியன் ரூபாய் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

ஆனால், அதன்பின் இன்று வரை இக்குளமானது புனரமைக்கப்படவில்லை. அதனால் 250 ஏக்கர் நீர்பாய்ச்சல் விவசாய காணிகளையும் செய்கை பண்ணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது பெய்யும் மழை நீரை முழுமையாக தேக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது. எமது வயற்காணிகள் ஊடாக அருகில் இருந்தும் எல்லையோர பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றத்திற்கான பாதைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

குறித்த குளமும் புனரமைக்கப்படாத பட்சத்தில் இந்நிலத்தை நாம் இழக்க வேண்டி வரும் என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் உரிய அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் கவனம் செலுத்தி தனிக்கல்லு குளத்தினை புனரமைத்து தரவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர். (2-250)

# பத்தினியார் மகிழங்குளம் கோவில் பரிவார விக்கிரகங்கள் உடைப்பு



வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலில் உள்ள பரிவார விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளதுடன் உண்டியலும் உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது, திருவெம்பாவை பூசை வழிபாடுகள் இடம் பெற்று வரும் இக்கோவிலில் மூலஸ்தான விக்கிரகம் உட்பட சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த பரி வார விக்கிரகங்களும் உடைக்கப்பட்டுள்ளதுடன் உண்டியலும் உடைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பூஜைவழிபாடுகளுக்காக மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த சிவலிங்கம் ஆலயத்தின் பிரதான வாயிலில் போடப்பட்டுள்ளதுடன் பண முடிச்சும் அதன் அருகில் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில்ஆலயத்தினுள் காணப்பட்ட இலத்திரனியல் பொருட்கள் வைக்கப்பட்ட அறை உடைக்கப்பட்டு இலத் திரனியல் உபகரணங்களுக்கு நீர் ஊற்றப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு திருவெம்பாவை பூஜைக்காக அதிகாலை சென்றபோது ஆலயம் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்தவர்கள் பொலிஸாருக்கு தகவலை அறிவித்துள்ளனர். இதற்கமைய பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.(2)

# மாங்குளம் ஆதார வைத்தியசாலை மின்பிறப்பாக்கி திருத்தப்படவில்லை

## நோயாளர்கள் அவதி

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கி பழுதடைந்து பல மாதங்கள் கடந்தும் அதனைத் திருத்துவதற்கான முயற்சி அல்லது அதற்குப் பதிலாக புதிய மின் பிறப்பாக்கி ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை




வைத்தியசாலை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படாது இருப்பதால் மின்சாரத் தடை ஏற்படும் வேளையில் நோயாளர்களும் வைத்தியசாலை பணியாளர்களும் பெரும் அவல நிலைக்குள்ளாகுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஏ-9வீதியிலுள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது 12 கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்களுக்கு வைத்திய சிகிச்சை வழங்கும் இடமாகவும் ஏ-9 வீதி கனகராயன் குளத்திற்கும் திருமுறிகண்டிக்கும் இடைப்பட்ட இடத்தில் வாகன விபத்துக்களினால் படுகாயம் அடைவோர் அவசர சிகிச்சைகளுக்காக மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் திடீரென மின்சாரத் தடை ஏற்படும் போது நோயாளர்களுக்கு செயற்கை சுவாசம் உட்பட மின்சார சாதனங்களைப் பயன்படுத்தி வழங்கப்படும் சிகிச்சைகளின் போதும் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தி மின்சாரத்தை விநியோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த வாரம் ஏ-9 வீதியில் வாகன விபத்தொன்றிற்கு உட்பட்ட நபரை மேற்படி வைத்தியசாலையில் அனுமதித்த வேளை மின்சாரத்தடை ஏற்பட்டது.

அவ் வேளையில் அங்கு கடமையாற்றும் வைத்தியர்களினதும் மற்றும் பணியாளர்களினதும் அர்ப்பணிப்பான சேவையினால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

எனவே வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இவ் விடயத்தை கவனத்தில் கொண்டு துரித கதியில் மின் பிறப்பாக்கி ஒன்றை வழங்கியுதவுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

## கல்வியமைச்சின் வேலைத்திட்டத்தில் வன்னிப் பாடசாலைகள் நிராகரிப்பு

### சாந்தி எம்.பி. குற்றச்சாட்டு

கல்வி அமைச்சின் "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" வேலைத் திட்டத்தில் வன்னிப் பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகள் நிராகரிக்கப்பட்டுள்ளமையினை கடுமையாக எதிர்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில்,

கல்வி அமைச்சின் "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் வேலைத்திட்டத்தினூடாக வன்னி பிரதேசத்தில் காணப்படுகின்ற 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள 30 பாடசாலைகள் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி திட்டத்தினூடாக 18 பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியாவில் 8 பாடசாலைகளில் 7 பாடசாலைகளும், மன்னாரில் 10 பாடசாலைகளில 5 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பாடசாலைகளில் 6 பாடசாலைகளுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் வன்னிப்பிரதேசத்தில் 12 பாடசாலைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

30 ஆண்டுகாலப் போராட்ட காலத்தில் எமது கல்வி வளங்கள் அழிந்தும் உட்கட்டுமான வசதிகள் என்பன அழிவடைந்த நிலையில் எமது கல்விசார் அபிவிருத்திகளை முன்னெடுப்பது கட்டாயமான பணியாக மாறியுள்ளது. இந்நிலையில் "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" வேலைத்திட்டத்தினூடாக பரிந்துரைக்கப்பட்ட பல பாடசாலைகள் நிராகரிக்கப்பட்டமையானது எமது மாணவர்களுக்கான கல்வி உரிமையினை மீறும் செயலாகும்.

வன்னிப்பிரதேச கல்வி அபிவிருத்தியினை முன்னேற்றுவதற்கு மிகப்பெரிய வாய்ப்பாக அடையக்கூடிய இத்திட்டத்தினை கல்வி அமைச்சு எமது நிராகரிக்கப்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் வழங்குதல் வேண்டும்.

எமது மாணவர் சமுதாயம் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் அடிப்படை வசதிகளற்ற நிலையிலும் தமது கல்வியை இடைவிடாது தொடர்ந்த மனோதைரியம் மிக்க சமூகமாகும். மீள்குடியேற்றத்தின் பின்னரான காலத்தில் கல்விசார் உட்கட்டுமான அபிவிருத்திகள் தேவையாகவுள்ளன. எமது மாணவர்களும் நவீன உலக கல்வி முறைமைகளுள் உள்வாங்கப்பட வேண்டும். அவர்களது திறமைக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது கல்வி அமைச்சின் பொறுப்பாகும்.

எனவே வன்னிப்பிரதேசத்தில் இருந்து பரிந்துரைக்கப்பட்ட அனைத்து பாடசாலைகளையும் மேற்படி திட்டத்தினுள் உள்வாங்கி எமது வன்னிப்பிரதேச கல்வி அபிவிருத்தியை இத்திட்டத்தினூடாக மேம்படுத்த வேண்டியது கல்வி அமைச்சின் கடமையாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

## கண்பார்வை இழந்த முன்னாள் போராளியின் குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகள்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின் கீழ் அண்மையில் கிளிநொச்சி வெள்ளாங்குளம் பகுதியில் வசித்துவரும் போரினால் கண்பார்வை இழந்த முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்திற்கு கோழிகளை வளர்ப்பதற்கு 15 ஆயிரம் ரூபா பணமும் அவரின் பிள்ளைகளுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களும், பாடசாலை காலணிகளும வழங்கப்பட்டுள்ளன.

குறித்த குடும்பத்தில் தந்தை முற்றாக கண்பார்வை இழந்ததுடன் இரு பிள்ளைகளும் இறுதிக்கட்ட போரினால் கண்பார்வைக் குறைபாடு அடைந்திருக்கிறனர்.

அன்றாட செலவுகளுக்காக போராடும் இந்த குடும்பத்திற்கு வாழ்வாதார திட்டத்தை வழங்க என எமது சங்கத்தை சார்ந்த ஜேர்மனியில் வசித்து வரும் நண்பர்களே நிதி நன்கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## யோகாசன பயிற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வெற்றி (ஜெயந்தி) நகர் இலங்கை குமரித் தமிழ்ப்பணி மன்றம் வழங்கும் யோகாசன நெறிப்பயிற்சி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் 077 620 3788 எனும் தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-5)

## தமிழ் நாட்காட்டி வெளியீடு

கிளிநொச்சி வெற்றி (ஜெயந்தி) நகர் இலங்கை குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் வெளியீடான 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாட்காட்டி வெளி வந்துள்ளது. (இ-5)

## மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம்

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இயங்கும் மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நீதி அமைச்சரின் நேரடிப் பணிப்பிற்கு அமைவாக நீதி அமைச்சின் செயலாளரினால் அண்மையில் சமாதான நீதவான் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 21 பேர் இரண்டு கட்டங்களாக கடந்த 14, 15 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (2-302)

## வீதியில் மயக்கமுற்ற குடும்பஸ்தர் மரணம்

### அளம்பிலில் சம்பவம்

(தண்ணீரூற்று)

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் வீதியில் வீழ்ந்துள்ளார். பிரஸ்தாப நபரை அயலவர்கள் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக கொண்டு சென்ற வேளையில் அவர் வழியில் உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் அளம்பில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் துரைவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நடராசா கருணாகரன் (வயது-51) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு செல்லும் பேருந்தில் பயணித்த பிரஸ்தாப குடும்பஸ்தர் தனது மகளை பார்ப்பதற்காக அளம்பிலில் இறங்கியுள்ளார். இதன்போது அவர் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த வேளை திடீரென மயக்கமுற்று கீழே வீழ்ந்த நிலையில் அயலவர்களின் உதவியுடன் மேற்படி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்தார். இவரது சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-292)

## நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி,பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்முனை, மண்ணித்தலை, விநாசியோடை, கௌதாரிமுனை, ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 130 குடும்பங்களுக்கு லண்டன் சிவன் கோவில் ஆதரவில் நிவாரணப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஞானசேகரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் மாதர்சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர் சங்கத்தை சேர்ந்தோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,

இந்த உதவிகள் சிறியவை. ஆனால் உங்களுடைய சில நாள் சீவியங்களை கொண்டு செல்ல முடியும். உங்களிடம் உள்ள வறுமை பெரியது. வறுமையை தீர்ப்பதற்காக பல வழிகளில் நாங்கள் போராடவேண்டி இருக்கிறது. வீடுகளில் வறுமை தாண்டவம் ஆடுகிறது. ஆனால் இவ் வறுமை தீர்ப்பதற்கு நாங்கள் புலம்பெயர் சமூகத்தின் உதவிகளோடு முயன்று வருகின்றோம் என்றார். (2)

## ஈழத்துச் சிதம்பர தரிசனம்

**வழிபட்டு சிவனிடம் வாழ்வுபெற வாரீர்!**

காரூரும் சோலைகளும் கவினூறும் காட்சிகளும்
நீரூறும் குளமும் நிதமுயரும் புதுவாழ்வும்
ஆறூரும் பேரழகும் அகங்கவர மிக்குயர்ந்த
தேரூரும் அகலத் தெருக்கள் நிறைந்திருக்கும்
பேரூரில் சுந்தரேசன் அருள் புரிந்து ஆடுகிறான்
ஏரூருந்து எழில் பெருக்கும் எம்மூரில்
எப்பவோ ஆண்டி அம்பலி முருகரால் எழுந்த கோயில்
வாரீர் வழிபட்டு சிவனிடம் வாழ்வு பெறுவோம்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்-
(இன்று (23/12/2015) புதன்கிழமை
7 ஆவது நாள் திருவெம்பாவை)

சி-3031

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய கட்டடத்தில் தலைவர் கலாநிதி.நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் போது புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற வுள்ளது. (இ-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி கலாவதி முரளி



தேசிய மட்ட ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியை தட்டெறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக் கங்களையும் வடமாகாணத்தின் முதலாம் இடத்தைப் பெற்ற வலைப்பந்தாட்ட அணி யையும் சேர்ந்த திருமதி கலாவதி முரளி அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**
**பாடசாலைச் சமூகம்**

(சி-3043)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 46செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L ஜேர்மன் PR<br>தொ.இ: B/3549 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 24<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:MA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:பெண்விவாகரத்தானவர் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3841 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 2 1/2 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்O/Lபிரான்ஸ் NOTPR<br>தொ.இ: B/3558 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 61செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில் :HNDM/தனியார் தொழில்<br>தொ.இ: G/3842 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/Lடுபாய்<br>தொ.இ: B/3572 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 39செவ் 4 இல்<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: பெண்விவாகரத்தானவர் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3854 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் : A/L உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/3577 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பெண்கணவனை இழந்தவர் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3858 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## பகிரங்க கேள்வி அறிவித்தல்-2016

கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான இறைச்சிக்கடைகள் மற்றும். நிறுத்தல் கொட்டகைகள் (கேள்வி மற்றும் மீள்கேள்வி அறிவித்தல்களில் எடுக்கப்படாத நிலையங்கள்) பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

பகிரங்க ஏலம் நடைபெறும் காலம் : 2015-12-28 திங்கட்கிழமை பி.ப 2.00 மணி
பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் : கரைச்சி பிரதேச சபை. தலைமை அலுவலகம்

கேள்விகோர விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தினை 28.12.2015 திங்கட்கிழமை காலை 08.30 தொடக்கம் 12.00 மணிவரை உப அலுவலகம். கரைச்சி பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறாதவர்கள் பகிரங்க ஏலத்திற்கு அனுமதிக்கப் படமாட்டார்கள் என்பதுடன் பிரதிநிதியாக கலந்து கொள்பவர்கள் விண்ணப்பதாரரால் அனுமதிக்கப்பட்ட கடிதத்தினை தம்வசம் கொண்டிருக்க வேண்டும். மேலும் பகிரங்க ஏலத்தில் தீர்மானிக்கப்பட்ட கேள்வித்தொகையில் 1/3 பங்கினை உடனடியாக செலுத்த வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, நீங்கலாக) (மீளளிக்கப்படமாட் டாது) |
|---|---|---|---|
| | சேவைச்சந்தை – கிளிநொச்சி | | |
| 1. | இல.1-கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 |
| 2. | இல.2 கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – வட்டக்கச்சி | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 1,000.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 5,000.00 | 1,000.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை(இராமநாதபுரம்) | 5,000.00 | 1,000.00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – இரணைமடு | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 1,000.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – உருத்திரபுரம் | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 5,000.00 | 1,000.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (D/8) | 5,000.00 | 1,000.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – ஸ்கந்தபுரம் | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 1,000.00 |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – தர்மபுரம் | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 5,000.00 | 1,000.00 |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | கல்லாறு | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | பொதுச்சந்தை – ஊற்றுப்புலம் | | |
| 1. | கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | வன்னேரி | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | கண்டாவளை | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | முரசுமோட்டை | | |
| 1. | கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | அக்கராயன் | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |
| | கல்மடு | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 |

நிபந்தனைகள்

1.கடந்தகாலக்கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்தத் தவறியவர்களும். கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக்கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்.

2.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ. நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.

3.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

4.இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள் என்பன குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர்சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியினை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் கொண்டுசெல்ல எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது.

6.ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

இ. கிருஸ்ணகுமார்,
செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை,கிளிநொச்சி.

(சி-3046)

# 7ஆயிரம் முறைப்பாடுகளை விசாரிக்க 650 அதிகாரிகள்

(கொழும்பு)

**7000 முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு 650 அதிகாரிகள் மாத்திரமே இருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளது.**

தற்போதுள்ள நிலையில் ஒரு அதிகாரி 120 முறைப்பாடுகளைக் கையாள வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போதியளவு அதிகாரிகள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் இன்மை, குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும் தொடர்பாடல் இடைவெளி என்பன விசாரணைகளில் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துவதாக புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கூறியுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் உள்ள அரச புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உள்ளிட்ட பிரிவுகள் குறித்தும், அவற்றில் காணப்படும்குறைபாடுகள்தொடர்பிலும்தேசியபொலிஸ்ஆணைக்குழு ஆராய்ந்துள் ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சிறி ஹெட்டிகே தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பொலிஸ் திணைகளத்தின் 17 பிரிவுகளின் பிரதானிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

பொலிஸ் திணைக் களத்தில் காணப்படும் தொழில்நுட்ப வளங்கள் புதுப்பிக்கப் பட வேண்டியதன் அவசியத்தையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். விசாரணைகளில் புதிய தொழில்நுட்பம் முக்கியமான பங்காற்றிவரும் நிலையில் சர்வதேச தரத்திலான தொழில்நுட்பத்தை புதுப்பிக்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் உள்ள பிரிவுகளுக்கிடையில் தொடர்புகளைப் பேணவேண்டியதன் அவசியம பற்றியும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி தொலைபேசி வலையமைப்பு நிறுவனங்கள் மற்றும் மோட்டார் திணைக்களம் ஆகியவற்றுடன் தொடர்புகளைப் பேணி அவற்றிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

உதாரணமாக எக்னெலிகொட, வஸிம்தாஜுதீன்மற்றும் லசந்த விக்ரமதுங்க ஆகியோரின் படுகொலைகள தொடர்பில் தொலைபேசிஅழைப்புக்களை பரிசீலிக்க வேண்டியுள்ளது. இருந்த போதும் தொலைபேசிநிறுவனங்களுடன்சரியான புரிந்துணர்வு இன்மையால் காலதாமதம் ஏற்படுவதாக இக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அதிமதுரம்

Botanical Name: Glycyrrhiza glabra
Family- Leguminosae
Eng- Liquorice
Sinh-welmi

இது யாழ்ப்பாணத்திற்குரிய மூலிகை அல்லாவிட்டாலும் இதனுடையவேர்உலர் சரக்காக தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கி சாதாரணமாக பயன்படுத்தக் கூடியதாகும். இது இலங்கையில் வளரக்கூடிய தாவரம் அல்ல.

இது பல்லாண்டு காலம் வாழக்கூடிய தடித்த வேர்ப் பகுதியை கொண்ட பெருஞ் செடியாகும். வேரின் வெளிப் பகுதி மண்ணிறமாகவும் உட்பகுதி மஞ்சள் நிறமாக காணப்படும் இனிப்புச் சுவையுள்ளது.

தரை மட்டத்திலிருந்து அதிக கிளைவிட்டிருக்கும். ஒவ்வொரு தண்டும் 60-120 செ.மீ. நீளமுடையதாக காணப்படும். இலைகள்ஒன்றுவிட்ட இலையொழுங்கு கொண்டவை. நீள் வட்டமுடைய கூட்டிலைகள். சிற்றிலைகள் 4-7 சோடிகளாக காணப்படும். பச்சை நிறமுடையவை. ஒழுங்கற்ற இருபாலான பூக்கள் கொண்டது. 2.5 செ.மீ. நீளமான பழங்கள். மெல்லிய மண்ணிறமுடைய பழங்கள். 2-5 விதைகள் காணப்படும்.

மருத்துவப் பயன்கள்

அதிமதுரத்தை 2 கிராமளவு தினமும்தேனில்குழைத்துச்சாப்பிட்டு வந்தால் நல்ல குரல்வளம் உண்டாகும்.

அதிமதுரம், ஆடாதோடை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துதினமும் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தொண்டையில் ஏற்படும் அனைத்து நோய்களும் குணமாகும்.

அதிமதுரம், கீழ்காய் நெல்லி, சீரகம், தலா 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 2 கிராம்





பொடியை தினமும் காலையில் மட்டும் சாப்பிட்டு வந்தால் கல்லீரல் பாதிப்புக்கள் குணமாகும்.

அதிமதுரம், சுக்கு, ஏலக்காய், தானிசபத்திரி, மிளகு, முந்திரிப்பருப்பு தலா 100 கிராம் எடுத்து பொடி செய்து அதில் 2 கிராம் பொடியை தினமும் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் இருமல் உட்பட வேறு சில நோய்களும் குணமாகும்.

அதிமதுரம் இலையை அரைத்து அக்குள் பகுதியில் தடவிக் கொண்டால் நாற்றம் தீரும்.

வேரை குடிநீரிட்டுக் கொடுக்க இருமல் தணியும்.

இதைக்குடிநீரிட்டு பனங்கற்கண்டோடு சேர்த்துக் கொடுக்க நீர்ச்சுருக்கு குணமாகும்.

அதிமதுரப்பால்

அதிமதுரப்பாலென்பது அதனுடைய சத்தாகும். 420 கிராம் அதிமதுரத்தை பஞ்சு போல் இடித்து ஒரு மட்பாண்டத்திலிருந்து 975 மில்லி லீற்றர் நீர்விட்டு ஒரு பகல் ஊறப்போட்டு பிசைந்து நீரை வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். இவ்வாறு பெற்ற நீரை மட்பாண்டத்தில் விட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்துச் சுண்டக்காய்ச்சி மெழுகுப் பதமாக வரும்போது இறக்கி வெயிலில் வைக்க கட்டி உறைந்து காய்ந்து விடும். இதுவே அதிமதுரப்பால்.

இதை வேளைக்கு 2-5 குன்றிமணியளவு வாயிலிட்டு அடக்கி அதிலிருந்து வரும் சுவையைவிழுங்கிக்கொண்டு வர தொண்டை நுரையீரலில் வரும் வரட்சி நீங்கும்.

இருமல் தணியும். தாகம் அடங்கும். சிறுநீரில் உண்டான வெப்பை மாற்றும்.

அதிமதுரத்தை இடித்து சூரணம் செய்து 2 கிராமளவு தேனில் குழைத்துக் கொடுக்க மார்பு, ஈரல், இரைப்பை, குரல், தொண்டை இவைகளிலுண்டான வறட்சியை மாற்றும்.

இருமல், தொண்டைக் கரப்பு, தாகம், நாட்பட்ட மூல வியாதி இவைகள் தீரும்.

அதிமதுரத்தை பொடித்து முலைப்பாலில் உரைத்து கண்களுக்குத் தீட்ட கண் ஒளி உண்டாகும்.

அதிமதுரச் சூரணம்

அதிமதுரம், கோஷ்டம், அக்கரகாரம், விலாமிச்சம் வேர், ஏலம், சிறுநாகம் பூ, கராம்பு, சிறு தேக்கு, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், கூகை நீறு, கோரைக்கிழங்கு, திப்பிலி, இலவங்கம் பட்டை, இலவங்கப் பத்திரி, நன்னாரிவேர், பருத்தி விதைப் பருப்பு, நெற்பொரி, நற்சீரகம், வகைக்கு 2 வராகனெடை (8.49) எடுத்தல், தாளிசபத்திரி 4 வராகனெடை இவற்றை பொன் வறுவலாக வறுத்துப் பொடித்து (சூரணம்) வைத்துக் கொள்ளல். தேவையேற்படும் போது 2 கிராமளவு காலை, மாலை சாப்பிட நெஞ்செரிவு, வாந்தி, பித்தம் என்பன தணியும்.

அதிமதுரம், சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து 2 கிராம் தினமும் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வரும் தலைவலி முழுமையாகக் குணமாகும்.

உடல் அனல் தணிய அதிமதுரம் 17 கிராம் எடுத்து வெந்நீரில் அரைத்துக் கலக்கி வடிகட்டி காலை மாலை கொடுக்கலாம்.

அதிமதுரம், முட்சங்கன், வேர்ப்பட்டை இரண்டையும் ஒரேயளவு எடுத்து பழச்சாறு விட்டு 3 நாட்கள் அரைத்து உருட்டி எடுத்தல். இதை பசும்பாலில் ஒரு நாளைக்கு இரு வேளை கொடுக்க மஞ்சள் காமாலை தீரும்.

சூட்டினால் உண்டாகும் இருமலுக்கு அதிமதுரம், கடுக்காய், மிளகு ஒரே அளவாக எடுத்து இளவறுப்பாய் வறுத்துபொடிசெய்து4முதல்6கிராமளவு தேனில்கொடுக்கலாம்.

பெண்களுக்கு ஏற்படும் குருதி நிற்க அதிமதுரம், சீரகம், வகைக்கு 15 கிராம் எடுத்து இடித்து 350 மில்லி லீற்றர் நீர்விட்டு 1/8 காய்ச்சி காலை, மாலை 3/4 நாள் கொடுக்கலாம்.

கழிச்சலுண்டாக அதிமதுரம் 105 கிராம், திராட்சை உப்பு 32 கிராம், இவற்றை இடித்து 700 மில்லி லீற்றர் நீர்விட்டு 1/8 ஆக வற்ற எடுத்து பயன்படுத்தல்.

வயிற்றில்மரித்த பிள்ளை விழ அதிமதுரம் 35 கிராம், தேவதாருக்கட்டை 35 கிராம் எடை எடுத்து இரண்டையும் வெந்நீர் விட்டரைத்து 17 கிராம் வீதம் இரு வேளை வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம்.

இதன் இலையை அரைத்துப்பூச சொறி, சிரங்கு என்பன தீரும்.

அதிமதுரத்துண்டுஒன்றை வாயிலிட்டு சுவைத்து விழுங்க இருமல் தணியும்.

அதிமதுரம்முப்பிணியால் வரும் புண், நீர்வேட்கை, கண் நோய்கள், விக்கல், சிறுநீர் எரிச்சல், காமாலை, வெண்குட்டம் போன்ற நோய்களின் வன்மையைக் குறைக்கும்.

சளியை இளகச் செய்து வெளியகற்றும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ஐ.எஸ்.புதுமுயற்சி

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் தங்கள் கொள்கைகளை பரப்பும் பொருட்டு ஐ.எஸ்.தீவிரவாதிகள் கைக்கொண்டிருக்கும் புது முயற்சியை முறியடிக்க அரசு சூளுரைத்துள்ளது.**



ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் தங்கள் கொள்கைகளை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பொருட்டு புதிய முயற்சியை கைக்கொண்டுள்ளனர்.

புதிதாய் வானொலி சேவை ஒன்றை தொடங்கியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்குள்ள தலிபான்களுக்கு இணையாக தங்கள் இயக்கத்திலும் ஆள் சேர்க்க முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

ஐ.எஸ்.தலைமையின் ஒரு மணி நேரம் நீண்ட வானொலி உரையில் இஸ்லாமிய இயக்கத்தில் இணைவதன் நோக்கம் குறித்து இளைஞர்களுக்கு விளக்கமளித்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் தலிபான் இயக்கத்தில் இருக்கும் தீவிரவாதிகளையும் தங்கள் இயக்கத்தில் இணைந்து போரிடும்படியும் அழைப்பு விடுத்துள்ளார்.

அச்சின் மாகாண ஆளுநர் ஹாஜி கலிப், ஐ.எஸ். ஆதரவு குழுக்கள் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருவதாகவும், புதிதாய் தொடங்கப்பட்டுள்ள வானொலி சேவை இந்த ஆதரவினை அதிகரிக்கச் செய்யும் எனவும் அச்சம் தெரிவித்துள்ளார்.

வானொலி சேவை வாயிலாக இளைஞர்களை அவர்களால் எளிதில் மூளைச்சலவை செய்ய முடியும் என தெரிவித்துள்ள அவர், அரசு தீவிரமாக செயற்பட்டு அவர்களின் இந்த முயற்சியை முறியடிக்க ஆவன செய்யும் என்றார்.

ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிராக போராடுவதில் ஆப்கானிஸ்தான ராணுவம் முற்றிலும் தோல்வி கண்டு வரும் இந்த நிலையில், அந்த அமைப்பின் வானொலி சேவையை முடக்க கடின முயற்சி தேவைப்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## அகதிகளிடம் பணம் பறிக்கும் டென்மார்க் அரசுக்கு கண்டனம்

டென்மார்க் வரும் அகதிகளின் உடைமைகளை தீவிரமாக பரிசோதனை செய்வதற்கு டென்மார்க் அரசாங்கம் பொலிஸாருக்கு அதிகாரம் அளித்துள்ளது. அந்த சோதனைகளில் அகதிகளிடம் இருக்கும் விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை பொலிஸில் கைப்பற்றி, அதைக்கொண்டு அகதிகளுக்கு ஆகும் செலவை ஈடுகட்ட முயற்சிப்பதாக தெரிவிக்கின்றனர். அகதிகள் டென்மார்க்கில் இருக்கும் போது அவர்களுடைய பராமரிப்புக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை அகதிகளிடமிருந்தே பெறுவதற்கான முயற்சி இது என்கிறது டென்மார்க் அரசு.

அகதிகள் மற்றும் குடியேறிகளின் உரிமைகளுக்கான அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் டென்மார்க் அரசின் இந்த முன்னெடுப்பை கொடூரமான செயல் என்று கடுமையாக கண்டித்துள்ளன. அனைத்தையும் இழந்து அகதியாக வருபவர்களிடம் கைப்பற்ற என்ன இருக்க முடியும்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-7)

## ஆப்கானிஸ்தானின் மற்றொரு மாவட்டம் தலிபான்கள் வசம்

ஆப்கானிஸ்தானின் ஹெல்மான்ட் மாகாணத்தின் மற்றுமொரு மாவட்டத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

சன்கின் மாவட்டத்தின் பொலிஸ தலைமையகம் தலிபான்களின் கட்டுப்பாட்டிற்கு சென்றிருப்பதோடு அந்த மாவட்டத்தின் மற்றுமொரு பாகத்தில் தொடர்ந்து மோதல் இடம்பெறுவதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹெல்மான்ட் மாகாண பிரதி ஆளுநர் ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கானிக்கு பேஸ்புக் பக்கத்தில் எழுதிய திறந்த மடலில், மாகாணத்தை பாதுகாக்க மத்திய அரசு போதிய ஆதரவு வழங்குவதில்லை என்று குற்றம் சாட்டி இருந்தார். முழு மாகாணமும் தலிபான்களிடம் விழும் வாய்ப்பு இருப்பதாக அவர் எச்சரித்திருந்தார். தற்போதைய மோதல்களில் குறைந்தது 90 ஆப்கான் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹெல்மான்ட் மாகாணத்தில் தலிபான்கள் அண்மைய மாதங்களில் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றபோதும் அங்கு போதிய படையினர் குவிக்கப்படாமலும் வெடிபொருட்கள் மற்றும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவிவருவதாலும் அரச படையினரால் தலிபான்களை எதிர்த்து நிற்க முடியாத நிலை உள்ளது. (இ-7)

## சுவிஸ் குடியிருப்பில் பயங்கர தீ விபத்து



(பேர்ன்)

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் குழந்தைகள் உட்பட பலர் பலியாகிருப்பதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவிஸின் ஆர்கவ் மாகாணத்தில் உள்ள Rupperswil என்ற நகரில் தான் இந்த பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதே பகுதியில் உள்ள பொலிஸார் மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கு நேற்று முன்தினம் முற்பகல் 11.20 மணியளவில் ஒரு அவசர தகவல் வந்துள்ளது.

தகவல் பெற்று அதிர்ச்சி அடைந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றுள்ளனர். இதே சமயம் தீயணைப்பு வீரர்களும் அங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

அப்போது அங்குள்ள குடியிருப்பிற்குள் தீவிபத்து ஏற்பட்டு கரும்புகை வெளியாகி கொண்டிருப்பதை பார்த்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க போராடியுள்ளனர்.

சிறிது நேரத்திற்கு பிறகு, தீயை கட்டுப்படுத்தியும் உள்ளே நுழைய முடியாது சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அருகில் இருந்த குடியிருப்பு வாசிகளிடம் விசாரணை நடத்தியதில், தீ விபத்து ஏற்பட்ட வீட்டில் ஒரு தாய், அவரது இரண்டு மகன்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் வசித்ததாக தெரிவித்தனர்.

தீயணைப்பு வீரர்கள் அளித்த தகவலில், வீட்டிற்குள்ளே பல உடல்கள் கிடப்பதாகவும், ஆனால், உள்ளே நுழைய முடியாததால் அவற்றை அடையாளம் காண இயலவில்லை என பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும் அதிர்ச்சி அளிக்கும் விதமாக அருகில் உள்ள பாடசாலை மாணவர்கள் அந்த வீட்டில் உள்ள நண்பர்களை பார்க்க வந்ததாக கூறப்படுவதால், அவர்களும் தீவிபத்தில் சிக்கி இருப்பார்களா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. (இ)

## தகர்க்கப்பட்ட விமானத்தின் கறுப்பு பெட்டியும் சேதமடைந்தது

எகிப்தில்குண்டுவைத்து தகர்க்கப்பட்ட விமானத்தின் கறுப்பு பெட்டி முழுமையாக சேதமடைந்து விட்டது என ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது.

எகிப்து நாட்டின் ஷரம்எல்ஷேக் நகரில் இருந்து ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு 217 பயணிகள் மற்றும் 7 ஊழியர்களுடன் கடந்த 31ஆம் திகதி புறப்பட்ட ஏர்பஸ் ஏ321 ரக விமானம் ஒன்று, புறப்பட்ட சில நிமிடங்களிலேயே சினாய் தீபகற்ப பகுதியில் விழுந்து நொறுங்கியது. இந்த கோர சம்பவத்தில் விமானத்தில் இருந்த 224 பேரும் உயிரிழந்தனர்.

வெடிகுண்டு மூலம் விமானத்தை வெடித்து சிதறச் செய்ததாக ரஷ்யா அதிகாரபூர்வமாக அறிவித்தது. விமானத்தின் கறுப்பு பெட்டியை கைப்பற்றி அதில் இருக்கும் தகவல்களை மீட்கும் வேலைகள் நடந்துவந்தன. இந்த நிலையில் கறுப்பு பெட்டியில் இருக்கும் 16 ரெக்கடர்களில் 13 அழிந்துவிட்டது. மீதமுள்ள 3 ரெக்கடர்கள் மிக மோசமாக சேதமடைந்துவிட்டது என ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது. (இ)

## செயற்கைக் கோள்களை விண்ணில் நிலை நிறுத்தி மீண்டும் பூமியில் வந்து தரையிறங்கிய ரொக்கெட்

விண்வெளி தொழில்நுட்பத்தில் புதிய மைல்கல்லாக பூமியில் 11 தகவல்தொழில்நுட்ப செயற்கைக் கோள்களுடன் சீறிப்பாய்ந்த "ஸ்பேஸ் எக்ஸ் ஃபால் கன் 9" என்ற ரொக்கெட் செயற்கைக் கோள்களை விண்ணில் கழற்றி விட்டுவிட்டு மீண்டும் ஏவிய இடத்துக்கே வந்து சேர்ந்த வியத்தகு சாதனையை அமெரிக்காவை சேர்ந்த ரொக்கெட்களை ஏவும் தனியார் நிறுவனம் நிகழ்த்தியுள்ளது.

சாதாரணமாக, செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக ஏவப்படும் ரொக்கெட்களில் நான்கைந்து உந்து இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கும். குறிப்பிட்ட கிலோமீற்றர் தூரம் வரை விண்ணில் பறந்த பின்னர், அதுவரை அந்த ரொக்கெட்டை இயக்கிய முதல் உந்து இயந்திரம் ரொக்கெட்டில் இருந்து விடைபெற்று, தனியாக கழன்று, தீப்பிழம்பாக மாறி, அருகாமையில் உள்ள கடல் அல்லது மலைப்பிரதேசத்தில் சாம்பலாக விழுந்துவிடும்.

அதையடுத்து, இரண்டாவது உந்து இயந்திரமும், மூன்றாவது உந்து இயந்திரமும், செயற்கைக் கோள்களை சுமந்து சென்று புவியின் நீள்வட்டப் பாதைக்கு மேலே குறிப்பிட்ட தூரம்வரை பயணித்து, அந்த செயற்கைக்கோள்களை விண்ணில் வெற்றிகரமாக நிலை நிறுத்தும். பின்னர், அந்த செயற்கைக்கோள்கள் தங்களது பணிகளை செய்யத் தொடங்கும்.

இந்த வாடிக்கையான நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த நினைத்த ரொக்கெட் தொழில்நுட்ப ஆய்வாளர்கள், ஒருமுறை பூமியில் இருந்து சீறிப்பாய்ந்து சென்ற ரொக்கெட் பத்திரமாக மீண்டும் செலுத்திய இடத்துக்கே திரும்பிவந்து தரையிறங்கும் தொழில்நுட்பத்தை உருவாக்க முயன்று வந்தனர்.

இப்படி திரும்பிவரும் ரொக்கெட்களை செப்பனிட்டு, சீர்படுத்தி, மீண்டும் அடுத்த முறை அவற்றை வைத்து வேறு செயற்கைக் கோள்களை விண்ணுக்கு ஏவினால், அவ்வப்போது புதிய ரொக்கெட்களை தயாரிக்கும் நேரமும், பணமும் மிச்சமாகும் என்ற நோக்கத்தில் இதற்கான ஆராய்ச்சிகளை ரொக்கெட் மூலம் செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு அனுப்பும் தனியார் நிறுவனங்கள் முனைப்பு காட்டி வந்தன.

அவ்வகையில், இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள அமேசான் டாட்காம் நிறுவனத்தின் துணை நிறுவனமான புளூ ஆர்ஜின் என்ற நிறுவனம் நடத்திய சோதனை வெற்றி பெற்றுள்ளது. (இ)


# ஸ்பெயின் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு பின்னடைவு

(மாட்ரிட்)

350 தொகுதிகளைக் கொண்ட ஸ்பெயின் பாராளுமன்றத்துக்கு கடந்த 20ஆம் திகதி தேர்தல் நடந்தது. இந்த தொகுதிகளின் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 99 சதவீத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டு விட்டன.

இதில் ஆளும் கட்சியான மக்கள் கட்சி 122 இடங்களை மட்டுமே கைப்பற்றி உள்ளது. இன்னொரு முக்கிய எதிர்க்கட்சியான சமத்துவ கட்சி 91 இடங்களில் வெற்றி பெற்றது. இடதுசாரி பொடிமோஸ் கட்சிக்கு 69 இடங்களும் குளு டாடானோஸ் என்ற கட்சிக்கு 40 தொகுதிகளும் கிடைத்தன. ஆட்சி அமைக்க 176 இடங்கள் தேவை என்கிற நிலையில்யாருக்கும்பெரும்பான்மை கிடைக்காது என்ற நிலை உரு வாகி இருக்கிறது. இதனால் கூட்டணி ஆட்சி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)

## மும்பையில் திடீரென மாயமான மூவருக்கு ஐ.எஸ்ஸுடன் தொடர்பு



(மும்பை)


மும்பையில் மாயமான 3 இளைஞர்களுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்பு ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மும்பை மால்வாணியை சேர்ந்தவர் அயுஷ் சுல்தான் (வயது 23). கால் சென்டர் ஊழியரான இவர், தனக்கு குவைத் நாட்டை சேர்ந்த நிறுவனத்தில் வேலை கிடைத்திருப்பதாகவும், இது தொடர்பாக புனே செல்ல வேண்டி இருப்பதாகவும் கூறி கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி வீட்டை விட்டு வெளி யேறியுள்ளார். அதன்பின்னர், வீடு திரும்பவில்லை.

இதே பகுதியை சேர்ந்த ஆட்டோ சாரதியான மொஷின் சேக் (26) மற்றும் பட்டதாரி இளைஞன் வாஜித் சேக் (25) ஆகியோர் கடந்த 16ஆம் திகதியில் இருந்து மாயமானார்கள். இவர்களை பற்றியும் எந்தவொரு தகவல் இல்லை.

இது தொடர்பாக அவர்களது பெற்றோர் அளித்த புகாரின்பேரில், மால்வாணி பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். (இ-7)

## சென்னையில் துப்புரவுப் பணியில் பெல்ஜியம் நாட்டுப் பிரஜை




பெல்ஜியம் நாட்டை சேர்ந்த பீட்டர் வெய்ன் கெய்ட் தலைமையிலான குழுவினர் சென்னை நகரை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

'சிஸ்கோ' நிறுவனத்தில் திட்ட இயக்குனராக பணியாற்றி வரும் பீட்டர் வெய்ன் கெய்ட் கடந்த 2008-ம் ஆண்டு 'சென்னை டிரெக்கிங் கிளப்பை உருவாக்கியுள்ளார்.

அவரது தலைமையிலான குழு மழை வெள்ளத்தால் சென்னை தத்தளித்தபோது, மக்களை மீட்கும் முயற்சியில் இறங்கி பள்ளிக் கரணையில் 130 பேரை பத்திரமாக மீட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது, பீட்டர் தலைமையிலான குழு சென்னை நகர் முழுவதும் குவிந்துள்ள குப்பைகளை அகற்றும் பணியில் இறங்கி உள்ளது.

ஆழ்வார்ப்பேட்டை, எம்.ஆர். சி.நகர், காந்திநகர், கோட்டூர்புரம், முகப்பேர், கீழ்ப்பாக்கம், வேளச்சேரி, அசோக் நகர் ஆகிய பகுதி யை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இவர்களின் சேவை சென்னை மக்களை வியப் படைய செய்துள்ளது. (இ)

## விமான விபத்தில் 10 பேர் உயிரிழப்பு

(டில்லி)

டில்லியில் எல்லைப் பாது காப்பு படை விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் 10 பேரும் உயிரிழந்தனர் என்று மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் மகேஷ் சர்மா கூறியுள்ளார். விபத்து தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

டில்லியில் இருந்து இந்திய எல்லைப் பாதுகாப்பு படை அதிகாரிகள் 3 பேர் மற்றும் 7 பொறியியலாளர்கள் சூப்பர் கிங் விமானத்தில் ராஞ்சி புறப்பட்டு சென்றனர்.

துவாரகாவில் இருந்து ராஞ்சி புறப்பட்டு சென்ற சூப்பர் கிங் விமானம் பக்டொலா பகுதியில் விழுந்து விபத்துக்குள் சிக்கியது. காலை 9:50 மணியளவில் விபத்து ஏற்பட்டது. விமானம், கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்த பின்னர் இந்த விபத்து நேரிட்டுள்ளது. விமானம் விபத்துக்குள் சிக்கியது தொடர்பாக தகவல் அறிந்ததும், அப்பகுதிக்கு தீயணைப்பு படை வாகனங்கள் விரைந்தது. விமானம் சுவர்மீது மோதி விபத்துக்குள்ளானது. விமானம் மோதிய வேகத்தில் தீப்பிடித்து எரிந்தது. தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை கட்டுககுள கொண்டு வந்தனர். (இ)

## விடுதலைக்கு எதிரான மனு உயர்நீதிமன்றால் நிராகரிப்பு

இந்தியத் தலைநகர் டில்லியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பேருந்தில் ஐவர் கொண்ட குழு பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியதில் ஒருவரின் விடுதலைக்கு எதிராக இந்திய உச்சநீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனுவை நிராகரித்துவிட்டது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் குற்றச்செயல் இடம் பெற்ற போது, அந்த நபருக்கு 17 வயது என்பதால், இந்திய சிறார் தண்டனைச் சட்டத்தின் அடிப்படையில் அவருக்கு மூன்று ஆண் டு கள் சிறை தண்டனை விதிக்கப் பட்டது.

தண்டனைக் காலம் முடி வடைந்து அவர் விடுவிக்கப்பட்டதற்கு எதிராக பெண்கள் அமைப்பு ஒன்று மேல்முறையீடு செய்தது.

மேல்முறையீட்டு மனுவை இரு நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வில்விடுவிக்கப்பட்ட நபரை தொடர்ந்து தடுத்துவைக்க சட்டத்தில் இடமில்லை என்று கூறி நிராகரித்தது.

அவர் இந்த மாதத்தின் முற்பகுதியில் விடுவிக்கப்பட்டு, அறக்கட்டளை ஒன்றின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த பாலியல் வன்செயலில் ஈடுபட்ட இதர நான்கு ஆடவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது நபர் சிறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். (இ)

## அழகியின் கிரீடம் பறிப்பு



அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் உள்ள பிளானெட் ஹாலிவுட் ரிசார்ட் அண்ட் கேசினோ என்னுமிடத்தில் 64ஆவது பிரபஞ்ச அழகிப் போட்டி (மிஸ் யுனிவர்ஸ்) கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் 80இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு அறிவுத் திறன், நீச்சல் உடை, மாலை நேர உடை என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு இறுதிப்போட்டிக்கு 10 அழகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரபல காற்பந்து வீரர் எமித் ஸ்மித், வலைத்தள எழுத்தாளர் பெரஸ்ஹில்டன், 2012ஆம் ஆண்டு மிஸ் யுனிவர்ஸ் அழகி ஒலிவியா கல்போ ஆகியோர் நடுவர்களாக செயற்பட்டனர்.

இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய அழகிகளில் பிலிப்பைன்ஸ்-ஜெர்மனி நடிகையும், பிரபல மாடல் அழகியுமான 26 வயது பியா அலோன்சா வர்ட்ஸ்பர்க் தேர்ந்தெடுக கப்பட்டார். இவர் ஜெர்மனியின் ஸ்டட கர்ட் நகரில் பிறந்தவர். இவரது பூர்வீகம் பிலிப்பைன்ஸ் ஆகும்.

முதல் முறையாக இறுதிச்சுற்றில் பங்கேற்ற அழகிகளுக்கு பார்வையாளர்களும், தொலைக்காட்சியில் நிகழ்ச்சியை நேரடியாக ரசித்தவர்களும் வாக்களிக்கும் முறை இந்த ஆண்டு அமுல்படுத் தப்பட்டு இருந்தது. இதிலும் பெரும்பான்மையான வாக்கு வர்ட்ஸ் பர்க் கிற்கே கிடைத்தது.

### இடம் மாறிய கிரீடம்

வெற்றி பெற்ற வர்ட்ஸ்பர்க்கிடம் இறுதிச்சுற்றில் கேட்கப்பட்ட கேள்விக்கு, "எச்.ஐ.வி. தொற்று குறித்து இளைய தலைமுறையினர் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவேன். இந்த உலகிற்கு எனது அழகான இதயத்தை திறந்து காட்டுவேன்" என்று அவர் பதில் அளித்து வாக்குகளை அள்ளிக் குவித்தார்.

முன்னதாக அழகிப்போட்டியை தொகுத்து வழங்கிய ஸ்டீவ் ஹார்வி முதலிடம் பிடித்த அழகி என்று கூறி கொலம்பியா நாட்டின் 21 வயது அரியட்னா குடியர்ரெஸ் என்பவரை தவறுதலாக அறிவித்து விட்டார். அவருக்கு வெற்றி கிரீடமும் அணிவிக்கப்பட்டு விட்டது. அப்போது தான் அரியட்னா 2ஆம் இடம் பிடித்தவர் என்பது தெரிய வந்தது. பின்னர் இந்த தவறுக்கு போட்டியை நடத்திய ஸ்டீவ் ஹார்வி மன்னிப்பு கேட்டுக் கொண்டனர். இதை யடுத்து, அரியட்னாவுக்கு அணிவிக்கப்பட்ட கிரீடம் அகற்றப்பட்டு வர்ட்ஸ் பர்க்கிற்கு சூட்டப்பட்டது. அமெரிக்காவின் ஆக்லஹோமா மாகாணத்தைச் சேர்ந்த 27 வயது துல்சா இந்த போட்டியில் 3ஆம் இடம்பிடித்தார். (இ)

## சிலிண்டர் வெடித்து ஐந்து பேர் மரணம்

ரஷ்யாவில் அடுக்குமாடி குடியிருப்பில் ஹாஸ் சிலிண்டர் வெடித்து சிதறியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவின் தென்பகுதியில் உள்ள வோல்கோகிராட்டில் நகரில் 9 மாடி கட்டடத்தில் நேற்று முன்தினம் திடீரென ஹாஸ் சிலிண்டர் பயங்கர சத்துடன் வெடித்து சிதறியது. கண்இமைக்கும் நேரத்தில் பரவிய தீயால் அந்த இடமே புகை மண்டலமானது. சிறிது நேரத்தில் கட்டடத்தின் சில பகுதிகள் இடிந்து விழத்தொடங்கின. இதனால் அங்கு இருந்த பலர் வெளியேற முடியாமல் உள்ளே சிக்கிக்கொண்டனர். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அவர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்து, மக்களை பாதுகாப்பாக மீட்டனர். இருந்த போதிலும் இந்த விபத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். காயம்அடைந்த 10 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கட்டடத்தின் அடிப்பகுதியில் ஏற்பட்டுள்ள இடிபாடுகளுக்குள் 10-க்கும் மேற்பட்டோர் சிக்கியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. (இ)



# சிறுவர் அரங்கம்

1314



## யானைக்கு வந்த நாட்டிய ஆசை!

மயிலிடம் போய் கற்றுக் கொள்கிறேன்!"

"மயிலாட்டம் உனக்கு வராது! எதற்கும் முயன்று பார்ப்போம்!"

இரண்டும் மயிலிடம் சென்று தங்கள் விருப் பத்தைக் கூறின.

மயில், எனக்கு ஆடத் தான் தெரியும் கற்றுக் கொடுக்கத் தெரியாது. பட்டணத்தில் இந்த நடனம் கற்றுக் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள் அங்கு சென்று பாருங்கள் என்றது.

இரண்டும் காட்டை விட்டு நகரத்துக்குள் வந்தன. நிறைய அலைந்து ஓர் நடனப் பள்ளியை அடைந்தன. தங்கள் விருப்பத்தை கூறின. அந்த நடனப்பள்ளியின் ஆசிரியை சொன்னார்.

உன் விருப்பத்தை தடை செய்ய வில்லை! நாளையே உனக்கு கற்றுக் கொடுக் கிறேன். ஆனால் அதற்கான உடையை அணிந்து வா! என்றார்.

உடை எங்கே கிடைக்கும்? துணிக்கடைக்கு போய் வாங்கி வாருங்கள் என்றார்.

இரண்டும் அங்கிருந்து அருகில் உள்ள ஒரு துணிக் கடைக்குச் சென்றன. தாய் யானை குட்டி யானையுடன் வருவதை கண்டு கடைக்காரர் மிரண்டு போனார். நில்லுங்கள் நில்லுங்கள்! உள்ளே வந்து பொருட்களை உடைத்து விடப் போகின்றீர்கள் உங்களுக்கு என்ன வேண்டும்?

பரதநாட்டிய உடை வேண்டும்!

உன்னுடைய சைஸ்க்கு உடை தயாராக இல்லை! வேண்டுமானால் துணி தருகிறேன்! தைத்து கொளளுங்கள். ஆனால் பணம் யார் தருவார்கள்?

பணமா? அப்படி என்றால்?

துணியை சும்மா தர முடியுமா? அதற்கு விலை இருக்கிறது! அந்த விலையைத் தான் கேட்கிறேன்!

சரி அது எங்கே கிடைக்கும்? உழைத்தால் கிடைக்கும்!

உழைப்பதா? அப்படி என்றால்?

ஏதாவது வேலை செய்தால் பணம் கிடைக்கும்!

சரி நீங்களே ஏதாவது வேலை கொடுங்களேன்!"

" சரி இந்த் துணி மூட்டை களை சுமந்து கடைக்குள் வையுங்கள்!"

மூட்டைகளை இரண்டும் சுமந்தன.

"பார்த்து பார்த்து கண்ணாடிகளை உடைத்துவிடப் போகிறீர்கள்!"

மாலை முழுதும் வேலை செயதுவிட்டு இப்போது துணியை தருகிறீர்களா? என்றன யானைகள்.

இந்தாருங்கள் துணி! இதை தையல் காரனிடம் கொடுத்து தைத்துக் கொள் ளுங்கள்! இரண்டும் தையல் காரனை தேடிச்சென்றன.

ஒரு தையல்காரனை கண்டு துணியை கொடுத்து தைக்கச் சொல்லின. என் வாழ்நாளில் இதுவரை யானைக்கு துணி தைத்தது இல்லை! இதை தைக்க நிறைய கூலி தேவை! அது உங்களிடம் இருக்கிறதா?

இரண்டும் முழித்தன. கூலியா அப்படின்னா?

இந்த துணியை சும்மாவா தைச்சு கொடுப்பேன்? அதுக்கு பணம் வேணும்? அது உங்க கிட்ட் இருக்கா? இல்லேன்னா கிளம்புங்க!

அப்போது அங்கு வந்தான் சர்க்கஸ் கம்பெனி முதளாளி ஒருவன். அவன் தன்னுடைய கூடாரத்துணியை தைக்க வந்தான். அவன் மனதில் ஒரு திட்டம் உருவானது. என்னுடன் வருகிறீர்களா என்று நைச்சியமாக அழைத்தான்.

இல்லை! இல்லை! நாங்கள் நாட்டியம் கற்க வேண்டும்?

அதற்குத்தான் கூப்பிடுகிறேன்! நான் நன்றாக நாட்டியம் கற்றுத்தருகிறேன்!

அதற்கு உடை தைக்க வேண்டுமே?

அதெல்லாம் இல்லாமலே நான் கற்றுத் தருகிறேன்!

அப்படியானால் சரி வருகிறோம்!

இரண்டையும் கூண்டு வண்டியில் ஏற்றினான் சர்க்கஸ் கூடாரத்திற்கு அழைத்து வந்தான். தினமும் அதற்கு பயிற்சிகளை வழங்கினான். சரியாக ஆடவில்லை என்றால் சவுக்கால் அடித்தான். பெரிய யானைக்கும் பயிற்சிகள் வழங்கினான். இரண்டையும் சங்கிலியால் கட்டிவைத்தான்.

இப்போது குட்டியானை தாயிடம் கேட்டது, அம்மா நாட்டியம் கற்க இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமா? வேண்டாம் அம்மா நாம் காட்டிற்கே போய்விடலாம்!

சரி வா முதலாளியிடம் கேட்போம்!

அய்யா! நாங்கள் எப்போது கானகம் போவது?

என்னது கானகத்திற்கா? இவ்வளவும் எதற்கு சொல்லிக் கொடுத்தேன்! நான் சம்பாதிக்க வேண்டாமா?

இன்றுமுதல் ஷோ ஆரம்பம்! நான் சொல்லி கொடுத்ததை எல்லாம் அரங்கத்தில் நீ செய்து காட்ட வேண்டும். ஷோ நிறைய வேண்டும்.

என்னது? நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு கற்றது நீ சம்பாதிக்கவா? இல்லை முடியாது!

உங்களை யார் விடப்போகிறார்கள்! முடியாது என்பதே கிடையாது! நீங்கள் ஆடித்தான் வேண்டும்.

அம்மா நாம் தப்பிக்கவே வழி கிடையாதா?

உண்டு! நான் சொல்வதைக் கேள்! இதுவரை நாட்டியம் கற்கவேண்டும் என்ற ஆசையால் இவன் சொல்வதை கேட்டு அடிமை போல இருந்தோம்! உன் நாட்டிய ஆசையை விட்டுவிடு நம் உடல் பளுவின் மேல் நம்பிக்கை வை! இந்த சங்கிலியை அறுத்தெறிந்து இவனை தூர வீசி நாம் தப்பித்துவிடலாம்.

உண்மைதான் அம்மா! இயல்புக்கு மாறாக இருந்து துன்பப்பட்டது போதும்! இப்போதே கிளம்புவோம்!

யானைகள் இரண்டும் ஆக்ரோசம் கொண்டன! சங்கிலிகளை அறுத்தெறிந்து ஓடத்தொடங்கின. தடுக்க முனைந்த பயிற்றுனரை தூக்கி வீசின. அவன் பயந்து ஓடினான்.

உடல் சோர்ந்து காட்டுக்குள் நுழைந்த யானைகளிடம் மயில் கேட்டது! யானையாரே நடனம் கற்றுக் கொண்டீர்களா?

நடனம் மட்டும் அல்ல! நல்ல பாடமும் கற்றுக்கொண்டேன்! என்று சொன்னன யானைகள்.

12.2015
23

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1783 - ஜோர்ஜ் வோஷிங்டன் இராணுவத்தளபதி பதவியில் இருந்து விலகினார்.

1914 - முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கினர்.

1916 - முதலாம் உலகப் போர்: எகிப்தின் சினாய்க் குடாவில் கூட்டுப் படைகள் துருக்கியப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் வெற்றி பெற்றனர்.

1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய இராணு வம் வேக் தீவைக் கைப்பற்றியது.

1947 - முதலாவது டிரான்சிஸ்டர் பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

1948 - பிரதமர் டோஜோ உட்பட ஏழு ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1954 - முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

1958 - டோக்கியோ கோபுரம், உலகின் மிகப்பெரிய இரும்பினாலான கோபுரம், திறக்கப்பட்டது.

1972 - நிக்கராகுவா நாட்டின் தலைநகர் மனாகுவா வில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10,000க்கு மேற்பட்டோர் இறந்தனர்.

1972 - தென்னமெரிக்காவில் அந்தீஸ் மலைத் தொடரில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிர் தப்பிய 16 பேர் 73 நாட்களுக்குப் பின்னர் காப்பாற்றப்பட்டனர்.

1979 - சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.

1986 - எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம் டிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானி களுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.

1990 - 88% சிலொவேனிய மக்கள் யூகொஸ்லா வியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

2004 - தெற்குப் பெருங்கடலில் உள்ள மக்குவாரி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

2005 - அசர்பைஜான் விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் பக்கூ நகரில் வீழ்ந்து நொருங் கியதில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

2005 - சாட் சூடானுடன் போரை அறிவித்தது.

### பிறப்புக்கள்

1807 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய ரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (இ. 1870)

1902 - சரண் சிங், இந்தியக் குடியரசின் 7ஆவது பிரதமர் (இ. 1987)

1956 - பொன்னம்மான், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் (இ. 1987)

### இறப்புகள

1907 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (பி. 1824)

1972 - அந்திரே தூப்பொலியெவ், சோவியத் விமான வடிவமைப்பாளர் (பி. 1888)

1981 பா.கக்கன் இந்திய விடுதலை போராட்ட வீரர், (பி.1908)

2004 - பி. வி. நரசிம்மராவ் ஒன்பதாவது இந்தியப் பிரதமர் (பி. 1921)

2013 - மிக்கைல் கலாசுனிக்கோவ், ஏகே47 துப்பாக்கியை வடிவமைத்தவர் (பி. 1919)

2014 - கே. பாலச்சந்தர், திரைப்பட இயக்குனர் (பி 1930)

# ஊடகப்போட்டி ஆபத்தானது!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அச்சம்

(கொழும்பு)

**ஊடக நிறுனங்களுக்கு இடையில் நிலவி வரும் கடுமையான போட்டித் தன்மை மிகவும் ஆபத்தானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



குற்றச் செயல் செய்தி அறிக்கையிடலில் ஊடகங்களின் பொறுபபு என்ற தொனிப்பொருளில் கொழும்பு பத்திரிகை நிறுவன கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை உன்னதமானது என்ற போதிலும் செய்தி அறிக்கையிடலின் சட்டத்தன்மை என்ற ஓர் கோணம் உண்டு என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

கௌரவமான ஊடக நிறுவனங்கள் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை மற்றும் செய்தி அறிக்கையிடலின் சட்டபூர்வ தன்மை ஆகியனவற்றை சமனிலைப்படுத்தி செய்தி வெளியிடும் கடப்பாட்டையும் பொறுப்பினையும் கொண்டிருக்கும்.

ஏனைய ஊடக நிறுவனங்களை பின்தள்ளி மக்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலான செய்திகளை மக்களுக்கு வழங்கும் போட்டித் தன்மை ஆரோக்கியமான நிலைமையாக கருதப்பட முடியாது.

இவ்வாறான தன்மை ஊடக நிறுவனங்களை ஆபத்தான நிலைமைக்கே இட்டுச் செல்லக்கூடும்.

போட்டி நிலைமை காரணமாக ஒரு ஊடகம் ,மற்றுமொரு ஊடகத்தை பின்தள்ள முயற்சிக்கின்றது.

பொலிஸ் சீருடை முறையாக பயன்படுத்தாமை குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க நேரிட்டது.

ஊடக நிறுவனங்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற போதிலும் பொது மக்கள் ஊடகங்கள் மீது முறைப்பாடு செய்யும் நிலைமை ஏற்பட்டுளளது.

மக்களின் தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்தை மதிக்க வேண்டிய அதேவேளை நபர்களின் அந்தரங்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செய்தி அறிக்கையிட வேண்டியது ஊடகங்களின் தார்மீக பொறுப்புக்களில் முக்கியமானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# அடுத்த வருடம் முதல் தொழிற்பயிற்சி பெறாதவர்கள் வெளிநாடு செல்லத்தடை

தொழிற்பயிற்சி பெறாதவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவது அடுத்த வருடம் முதல் தடை செய்யப்படும் என திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சியை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளதாகவும் 2016 ஆம் ஆண்டு இளைஞர், யுவதிகள் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேருக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் தொழிற்பயிற்சிக்காக 15 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நாட்டில் சர்வாதிகாரம் ஜனநாயகமாக சித்திரிக்கப்பட்ட காலம் மாறியுள்ளது

## அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு



சர்வாதிகாரத்தை ஜனநாயகமாக சித்திரித்துக் கொண்டிருந்த காலகட்டம் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி.நோய்த்தாக்கத்துடன் வாழும் நோயாளிகளுக்கான சட்ட உதவிகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. ஹெக்டர் கொப்பேகடுவ நிலையத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

குறித்த வைபவத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், பொது மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்த்து அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சுதந்திர இலங்கையின் 67 வருடகால வரலாற்றில் இது ஒரு திருப்பு முனையாகும்.

அரசாங்கம் அடிபணிந்து விட்டது, அரசாங்கத்தின் பலவீனம் என்று பலரும் இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனாலும் பொதுமக்களின் நன்மை கருதியே இந்த திருத்தங்கள் உள்வாங்கப் பட்டுள்ளன.

அது மாத்திரமன்றி ஒருசிலர் தங்களின் சர்வாதிகாரத்தை ஜனநாயகமாக சித்திரித்த காலகட்டம் ஒன்றும் இலங்கையில் நிலவியது. தற்போது நாங்கள் அதனை மாற்றியமைத்துள்ளோம். அதன் காரணமாகவே பொதுமக்கள் கோரிக்கை ஏற்கப்பட்டு, வரவு செலவுத் திட்டம் கூட மாற்றி அமைக்கப்படும் நிலை தோன்றியுள்ளது என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## தொலைவு இருத்தல்

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் சொந்தமாக ஒரு கார் வைத்திருந்தார். அதில் ஏறி உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தார் என்றால் போதும் வழியில் வருபவர், போகிறவர்களை திட்டிக் கொண்டே போவார்.

இவர் மட்டும்தான் வீதியில் ஒழுங்காக செல்பவர் போலவும் மற்றவர்களெல்லாம் தாறுமாறாக போவது போலவும் அவருடைய நினைப்பு.

எதிரில் யாருமே வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதும் திட்டுவார்.

“என்ன றோட் இது...சுடுகாடு மாதிரி” என்பார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு!

இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வசதியாக அமையக்கூடிய ஒரு தொழில்நுட்பம் தான் ‘தொலைவு இருத்தல்’ என்பது. அதாவது Telepresence இது ஒரு நவீன உத்திமுறை.

நம்மைத் தொலைவில் இருப்பதாக நினைக்கச் செய்யும் ஒரு தோற்ற அனுகூலம். இது எப்படியென்றால்...

காரோட்டுபவர் காரில்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவர் இன்னொரு ஊரில் கூட இருக்கலாம்.

அதாவது ஒரு மதுரையில் உட்கார்ந்து கொண்டு சென்னை அண்ணாசாலையில் காரோட்டலாம். வழியில் வருபவர், போகிறவர்களை திட்டலாம். வம்பு வராது, ஏனெனில் அவர்களின் காதில் இது விழாது.

இது எப்படியென்றால்...

தொலைவு இருப்பு முகமூடி ஒன்றை தலையில் மாட்டிக் கொள்ள வேண்டும். அந்த முகமூடிக்குள் சின்னத் திரை இருக்கும். நீங்கள் இதை மாட்டிக் கொண்டு மதுரையில் ஒரு குளிர்சாதன அறைக்குள் கணிப்பொறிப் பெட்டிகளுக்கு மத்தியில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

அந்தச் சின்னத்திரையில் சென்னையிலுள்ள அண்ணா சிலை தெரிகிறது. எதிரில் வரும் கார்... குறுக்கே போகும் சைக்கிள் எல்லாம் தெரிகிறது. கார் சாரதி ஆசனத்தில் நீங்கள் உட்கார்ந்திருந்தால் என்னென்ன தெரியுமோ அவையெல்லாம் அந்த சின்னத்திரையில் தெரியும்.

நீங்கள் பாட்டுக்கு மதுரையில் ஓர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டே சென்னையில் காரை செலுத்திக் கொண்டு போகலாம். சைக்கிள் குறுக்கே வருகிறதா... சடாரென வண்டியை நிறுத்தலாம். இடதுபக்கம் முந்தி ஒரு ஸ்கூட்டர் வேகமாக போகிறதா... அதை விரட்டிப் பிடிக்கலாம்.

சென்னை அண்ணாசாலையில் நீங்கள் வண்டி ஓட்டுவது நிஜம். ஆனால், மதுரையில் உங்கள் முகமூடிக்குள் தெரிவது மாயத்தோற்றம்... அதை மாய நிஜம் அல்லது மாய யதார்த்தம் என்று சொல்கிறார்கள். Virtual Reality

விண்வெளி ஆராய்ச்சிக்கெல்லாம் இந்தத் தொழில்நுட்பம் மிகவும் உபயோகம். இயந்திர மனிதர்களை செவ்வாய்க் கிரகத்தில் இறக்கி விட்டுவிட வேண்டியது. இங்கே முகமூடியை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டே அவர்களை வேலை செய்ய வைக்கலாம். எந்தப்பக்கம் போக வேண்டுமோ – போக வைக்கலாம். மண்ணைத் தோண்டி எடுக்க வேண்டுமா – எடுக்க வைக்கலாம். அங்கு போய் நாம் என்ன செய்ய நினைக்கிறோமோ அவற்றையெல்லாம் இங்கிருந்தே செய்யலாம்.

பூமியில் இருக்கும் கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்து கொண்டு முகமூடியை மாட்டிக் கொண்டு கை,கால்களில் மின்னணு உணர் கருவிகளை பதித்துக் கொண்டு செவ்வாய் கிரகத்திலுள்ள மின்னணு கருவிகளை இயக்கலாம்.

செவ்வாய் கிரகத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மின்காந்த அலைத் தொடர்பு வழியாக பூமிக்கு வந்து சேர குறைந்தது 20 நிமிடமாவது எடுக்கும். ஆனால், இந்த முகமூடியைப் போட்டிருப்பவர் உடனுக்குடன் அங்கே பார்ப்பதை நேரடி வர்ணனை செய்யலாம்.

இந்த மாயத்தோற்ற அறிவியல் எதிர்காலத்தில் பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்யப்போகிறது.

ஒரு பேருந்து ஓட்டுநர் திடீரென்று சிரிக்கத் தொடங்கினாராம்.

“ஏன் சிரிக்கிறீங்க?'' என்று கேட்டிருக்கிறார் பக்கத்திலிருந்தவர்.

“துன்பம் வரும்போது சிரிக்கச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள். அதனால் சிரிக்கிறேன்” என்றார்.

“இப்பொழுது யாருக்குத் துன்பம்?” என்றார் இவர்.

“நம் எல்லோருக்கும்தான் என்றார்” அவர்.

“எப்படிச் சொல்றீங்க?” என்றார்.

“எதிரில் பாருங்க ஒரு சக்கரம் உருண்டு ஓடிக் கொண்டிருக்கிறது” என்றார் அவர்.

''அந்தச் சக்கரத்துக்கும் நம் துன்பத்துக்கும் என்ன சம்பந்தம்?''

“அது நம்முடைய பேருந்திலிருந்து தான் கழன்று ஓடிக் கொண்டிருக்கிறது” என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2015~14.01.2016

## அஷ்டமத்து குருவும், ஜென்ம கேதுவும் அடியெடுத்து வைக்கும் நேரம்



அஷ்டமத்து குருவும், ஜென்ம கேதுவும் அடியெடுத்து வைக்கும் நேரம்!

எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் கும்ப ராசி நேயர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் குரு உங்கள் ராசியைப் பார்க்கிறார். டிசெம்பர் 19 ஆம் திகதி வரை பார்க்கும் குருவால் பலன் அதிகம் கிடைக்கும். வருமானம் திருப்தி தரும். வளர்ச்சி கூடும். அருமைக் குழந்தைகளோடும், அன்பான வாழ்க்கைத் துணையோடும் இல்லறத்தை நல்லறமாக நடத்த வாய்ப்புகள் கைகூடி வரும்.

ஆனால் டிசெம்பர் 20ஆம் திகதி அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கிறார். சில நாட்கள் மட்டும் அங்கிருந்தாலும் கூட எட்டாமிடத்து குரு எதிலும் தாமதத்தை ஏற்படுத்தும். உழைப்பிற்கேற்ற பலனைக் கிடைக்க விடாது. திடீர் மாற்றங்களைக் கொடுக்கும். தெய்வ தரிசனங்களை மேற்கொள்வதன் மூலம் ஓரளவு நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும். பழைய வாகனங்களில் பழுதுச் செலவு அதிகரிக்கும். எனவே அதை கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். பழைய கூட்டாளிகளால் பிரச்சினைகள் உருவாகலாம். எனவே புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் ஒரு சிலருக்கு உருவாகும்.

அடுத்து வரும் ராகு-கேது பெயர்ச்சி காலம் அதிக விழிப்புணர்ச்சி தேவைப்படும் காலமாகும். இதுவரை கடைப்பிடித்த பொறுமையைக் காட்டிலும் இன்னும் கொஞ்சம் அதிகப் பொறுமையுடன் செயறபட வேண்டிய சூழ்நிலை உருவாகும். முறகோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலம் முக்கிய திருப்பங்களைச் சந்திக்க நேரிடும். ஜென்ம கேது ஆன்மக நாட்டத்தை அதிகரிக்கச் செய்யும். உடலில் சிறுதொல்லைகள் வந்து கொண்டே இருக்கும். சப்தம ராகு சஞ்சலத்தை அதிகரிக்கச் செய்யும். குடும்பத்தில் குழப்பங்கள் கூடும். கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ள நேரிடும். சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் அதிகரிக்கிறது என்பதால் சுய ஜாதகப்படி ஜாத்கத்தில் தசாபுத்தி பலம் அறிந்து சர்ப்ப சாந்தி செய்வது நல்லது.

**அதிசார குருவின் ஆதிக்கம்!**

குரு, கன்னி ராசிக்கு அதிசாரமாக டிசெம்பர் 20 ஆம் திகதி வரப்போகிறார். 8 இல் அடியெடுத்து வைக்கும் குரு எண்ணற்ற மாற்றங்களை உருவாக்கும்.சுயஜாதகத்தில் மறைவிடத்தில் குரு இருக்குமேயானால் இப்பொழுது நல்ல நேரம் உருவாகும். இல்லையேல் இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவைகளையும், எதிரிகளின் தொல்லைகளையும், விரயங்களையும் உருவாக்கும். ஆரோக்கியத்திற்காக செலவிடும் அமைப்பு உண்டு.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 26ஆம் திகதி உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் சுக்ர பகவான் செல்கிறார். இது நன்மையை வழங்கும். 4, 9-க்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது, பெற்றோர்களின் அனுகூலத்தோடு தொழில் தொடங்கும் வாய்ப்புகள் கைகூடிவரும். சிக்கல்களில் இருந்த பூர்வீக சொத்துக்கள் விற்பனையாகும். விரயங்களை சுபவிரயமாக்கிக் கொள்ள முன்வருவீர்கள். கட்டடம் கட்டும் முயற்சியில் ஆர்வம் கூடும்.

**துலாம் ராசியில் செவ்வாய் வரும் நேரம்!**

உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் டிசெம்பர் 28




ஆம் திகதி இதன் விளைவாக சகோதரர்களால் சகாயம் ஏற்படும். தொழில் பங்குதாரர்கள் தொகைகளைக் கொண்டு வந்து சேர்ப்பர். நகைகள் வாங்குவதில் பிரியம் கூடும். நாணயப் பாதிப்பிலிருந்து விடுபடுவீர்கள்.

**ஜென்ம கேது-சப்தம ராகு!**

ராகு-கேது பெயர்ச்சி உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொடுக்கப் போகின்றது. ஜனவரி 8ஆம் திகதி புதிய திருப்பங்களைக் காணப் போகிறீர்கள். அன்று தான் கேது உங்கள் ராசியில் அடியெடுத்து வைக்கிறார். ஆன்மகத்தில் அக்கறை காட்டுவீர்கள். அடுத்தவர் நலனுக்காக அலைச்சலை மேற்கொள்வீர்கள். எடுத்த காரியங்களில் இய்ல்பாகவே தாமதம் ஏற்படும். 7 இல் ராகு இருப்பதால் இல்லத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் விருப்பங்கள் நிறைவேறும். ராகு-கேதுக்களுக்கு முறையான வழிபாடு செய்தால் நன்மை கிடைக்கும். உறவினர்கள்ள அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் உண்டு. இம்மாதம் விநாயகர் வழிபாடு வெற்றியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்தில் வரவு திருப்தி தரும்.வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்க இல்லத்தில் உள்ளவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். அடுத்து வரும் அஷ்டமத்து குருவின் ஆதிக்கமும், ஜென்ம கேது, சப்தம ராகுவின் ஆதிக்கமும் நிம்மதி இழக்கச் செய்யலாம். நீடித்த நோயிலிருந்து விடுபட மருத்துவச் செலவுகள் உருவாகலாம். கணவன்-மனைவிக்குள் உறவு மேம்பட ஒற்றுமை பலப்பட அனுசரிப்புத் தேவை. குழந்தைகள் உங்கள் மேற்பார்வையில் இருப்பது நல்லது. அவர்களின் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். வீண் விரயங்களை சுபவிரயமாக மாற்றிக் கொள்வது நல்லது. நந்தி வழிபாடு நன்மையை வழங்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## அதிசார குரு ஆதாயம் தரும்



எந்தப் பிரச்சினையையும் எளிதில் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மீன ராசி நேயர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் குரு பகவான் 6 இல் இருந்தாலும் ஒருசில நாட்களுக்கு கன்னி ராசிக்குச் சென்று சப்தம பார்வையாக உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். எத்தனை பார்வைகள் இருந்தாலும் சப்தம பார்வைக்கென்று ஒரு தனிப் பலன் உண்டு. எனவே அதிசார குருவின் ஆதிக்க காலத்தில் உங்கள் மதிப்பும், மரியாதையும் உயரும். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சி நடைபெறும்.

புதியவர்கள் உங்களோடு வந்திணைந்து பொறுப்புகளை முடித்துக் கொடுப்பர். அதிகாலையில் இருந்து அர்த்தசாமம் வரை உழைத்தும் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்றிருந்தவர்களுக்கு ஒப்பற்ற நற்பலன்கள் கிடைக்கும் நேரமிது. ஆனால் ஜென்ம கேதுவும், சப்தம ராகுவும் இம்மாதம் விலகப்போகிறார்கள். அப்படி விலகும் பொழுது 12 இல் கேது வருகிறார். இதன் விளைவாக பயணங்கள் அதிகரிக்கும். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம் போன்றவை வரிசையாய் வந்து அணிவகுத்து நிற்கும்.

சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருந்தால் வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. பலம் இழந்திருந்தால் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது தான் நல்லது. அரசுவழிக் கடன் உதவி பெற்றுத் தொழில் நிலையத்தை விரிவுபடுத்தும் அமைப்பு ஒரு சிலருக்கு ஏற்படும். ஒருசிலர் கடன்உதவி பெற்று வாகனம் வாங்குவதில் கவனம் செலுத்துவர். விநாயகப் பெருமான் வழிபாடும், துர்க்கை வழிபாடும் தொடர்ந்து செய்வது நல்லது.

**அதிசார குருவின் ஆதிக்கம்!**

டிசெம்பர் 20 ஆம் திகதி அதிசாரம் பெற்ற குரு கன்னி ராசிக்கு வருகிறார். இதன் விளைவாக அதன் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. பார்க்கும் குருவால் பலன்கள் ஏராளமாக நடைபெறும். பணிகளிலிருந்த தொய்வு அகலும். பணத் தேவைகள் பூர்த்தியாகும். இனி வரும் காலத்திற்கென்று ஏதேனும் சேமிக்க முற்படுவீர்கள். உங்கள் மணியான யோசனைகளைக் கேட்டு மற்றவர்கள் பாராட்டுவர். பிணிகள் அகலும். பிரச்சினைகள் தீரும். வருமானம் திருப்தி தரும். வரன்கள் வாசல் தேடி வந்து, கைவிட்டுப்போகிறதே என்று கவலைப்பட்டவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் புதிய வரன்கள் வந்து சேரும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் உன்னத வாய்ப்பும் உருவாகும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

இதுவரை துலாத்தில் சஞ்சரித்து வந்த சுக்ரன் டிசெம்பர் 26 ஆம் திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். 3, 8 இற்கு அதிபதி 9இல் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு கை கொடுத்து உதவி செய்வீர்கள். நூதனப் பொருள் சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு உண்டு. பெண்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

**அஷ்டமத்து செவ்வாயின் ஆதிக்கம்!**

அஷ்டமத்தில் செவ்வாய் டிசெம்பர் 28இல் அடியெடுத்து வைக்கப் போகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு அகலும். இலைமறை காயாக இருந்த பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கலாம். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. பாகப்பிரிவினைகள் சாதகமாக முடியுமா? என்பது சந்தேகம்தான்.




**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

ஜனவரி 8 ஆம் திகதி பின்னோக்கிச் செல்லும் பாம்பு கிரகங்கள் மாற்றமடைகின்றன. ஞானகாரகன் கேது இதுவரை உங்கள் ராசியில் சஞ்சரித்து வந்தவர் இப்பொழுது கும்பத்திற்குச் செல்கிறார். கும்ப கேதுவால் விரயங்கள் கூடுதலாகக் கிடைக்கும் என்றாலும் கூட சிம்ம ராகு செல்வத்தை வரவழைத்துக் கொடுப்பார். எனவே செலவிற்கேற்ற வரவு வந்துகொண்டே இருக்கும். அயல்நாட்டுப் பயணம் கைகூடலாம். உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம். வீடு கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றை மேற்கொள்ள உகந்த நேரமிது.

உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ராகு-கேதுக்களின் பாதசார பலமறிந்து வழிபாடுகளை மேற்கொண்டால் சோதனைகள் மாறிச் சுகங்கள் கூடும். இம்மாதம் குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் அதிசார குருவின் ஆதிக்கத்தால் அன்றாட வரழ்க்கை நன்றாக அமையும். கூட்டுக் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் மாறும்.


தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷ தகவல் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். ஆசைப்பட்ட பொருட்களை வாங்கி மகிழ வருமாணம் திருப்தி தரும்.

குழந்தைகளின் வெளிநாட்டு முயற்சி கைகூடும். கல்யாணக் கனவு களை நனவாக்குவீர்கள். தாய் வழி ஆதரவு கிடைக்கும். ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் சர்ப்ப கிரக வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். ஆறுமுகன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(முற்றும்)

# அரசுடன் கள்ளத்தனமாக ஜே.வி.பி.இணைந்துள்ளது

சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு



மத்தியில் அமைந்துள்ள கூட்டு அரசாங்கத்தில் மக்கள் விடுதலை முன்னணி நேரடியாக இணையாவிட்டாலும்கள்ளத்தனமாக இணைந்து கொண்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவரும் மக்கள் சேவை கட்சியின் தலைவருமான சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்துடன் மறைமுக தொடர்புகளை வைத்திருக்கும் மக்கள் விடுதலை முன்னணி வெளியில் அரசாங்கத்துக்கு எதிரான கட்சி என இனம் காட்டும் வகையில் அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணி செல்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து வெளியேறி மக்கள் சேவைக் கட்சியை எதற்காக ஆரம்பித்தீர்கள் என அதிகமானவர்கள் என்னிடம் கேட்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணி இன்றைக்கு 50 வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்டதாகும். 49 ஆவது வருடம் கழிந்து சென்றுகொண்டிருக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி தடம்மாறியது. அதன் பயணப் பாதை பிழையாக மாறியது. அதனால்தான் கட்சியில் தொடர்ந்து இருக்காமல் வெளியேறிவிட்டேன். அவ்வாறு இல்லையென்றால் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற சகல விடயங்களுக்கும் நானும் பொறுப்புக் கூறவேண்டி வந்திருக்கும்.

ரோஹண விஜேவீர மக்கள் விடுதலை முன்னணியை பொது மக்களின் கட்சியாகவே கட்டியெழுப்பினார். என்றாலும் தற்போதைய தலைவர் அதனை மறந்துள்ளார். கட்சியின் தற்போதைய தலைவர்கள் கறுப்பு சந்தையின் கையாட்களாகியுள்ளனர். அவர்களின் தேவைக்கேற்ப செயற்படும் பிரிவினர்களாகியுள்ளனர். அதனால்தான் கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கு மக்கள் வாக்களிக்காமல் நிராகரித்தனர்.

மேலும். இம்முறை பொதுத் தேர்தலின் பின்னர் கூட்டு அரசாங்கமொன்று உருவானது. ஐக்கிய தேசிய கட்சி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து அமைத்த இந்த கூட்டு அரசாங்கத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளிப்படையாக இணையாவிட்டாலும் கள்ளத்தனமாக கூட்டுச் சேர்ந்துள்ளன. அநுரகுமாரவுக்கு அதனை பொய் என்று சொல்ல முடியாது.

இவர்கள் பாராளுமன்றத்திற்குள் செயற்படும் விதத்தில் அல்ல மறைமுகமாக இணைந்தே செயற்படுகின்றனர். வெளியில் அரச எதிர்ப்பு கட்சி போன்று அரசாங்கத்துக்கு எதிராக பேரணிகளை நடத்தி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இப்போது இந்த நாட்டை நிர்வகிப்பது கூட்டு அரசாங்கமல்ல. குழப்ப அரசாங்கமாகும். இந்த அரசில் குழப்பம் இல்லாத இடமில்லை.

அரசாங்கம் முழு நாட்டையும் குழப்பி வருகின்றது. தற்போது இந்த நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லை என்பதே உண்மையான நிலைமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 400 மில்லியன் பெறுமதியான அரிசி மாயம்

**கடந்த ஆண்டு சதொச நிறுவனத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட 400 மில்லியன் ரூபா பெறுமதியான அரிசி மாயமாகியுள்ளதாக பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கடைசிக் காலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

கடந்த ஆண்டில் மட்டும் சதொச நிறுவனம் சுமார் 6.6 மில்லியன் கிலோ அரிசியை இலங்கைக்கு இறக்குமதி செய்திருந்தது.

இதில் சுமார் 300 கன்டெய்னர்களில் கொண்டுவரப்பட்ட 400 மில்லியன் ரூபா பெறுமதியான அரசி துறைமுகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும் போது மாயமாக மறைந்துள்ளது.

இதனை முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான கொழும்பின் முக்கிய வர்த்தகர் ஒருவர் துறைமுகத்திலிருந்து முறைகேடான வகை யில் எடுத்துச் சென்றிருப்பதாக தற்போது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான தீவிர விசாரணைகளை பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. (இ)

# தொழில் திறனை மேம்படுத்த கொரியா ஆதரவு!


நாட்டின் தேசிய தொழில் திறனை அபிவிருத்தி செய்ய கொரியாவின் ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கான கொரிய நாட்டின் தூதுவர் வொன் ஷாம் வாங்கும் (Won Sam Wang) அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்னவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இக்கருத்தினை தூதுவரிடம் தெரிவித்தார்.


தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது தொழிலாளர்களின் திறன்களை அதிகரிப்பதன் மூலம் அவர்களது உரிமைகளையும் நலன்களையும் அதிகரிக்க முடியுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். இருநாடுகளுக்கிடையிலும் தொழிற்றிறன் அபிவிருத்தி திறன்களை அதிகரிப்பதன் மூலம் நாடுகளுக்கிடையிலான பரஸ்பர நட்புறவினை அதிகரிக்க முடியுமெனவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 582

ராகுலன் பாலா




வின்ஜக்சன்




அஜந்தன்




கோபிதாஸ்




நதீபன்




விமல் சந்திரா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சீனா தொடர்பாக மைத்திரிக்கு ஜோன்கெரி கூறிய இரகசியம்?



நேற்றைதொடர்ச்சி...

யுனான் மாகாணத்தில் விடுதி வர்த்தகம் மற்றும் பெற்றோலியம் போன்ற துறைகளில் இலங்கை நிறுவனங்கள் அதிகம் முதலிட்டுள்ளன.

இதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. இலங்கையிலிருந்து சுற்றுலாப் பயணிகள் யுனானிற்கு வருகை தருவதும் தற்போது அதிகரித்துள்ளது.

அத்துடன் விடுதி மற்றும் உணவக வர்த்தகங்களை இலங்கை நிறுவனங்கள் மேம்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் யுனான் மாகாணத்தில் அதிகம் காணபடுகின்றன என செங் குறிப்பிட்டார்.

எது எவ்வாறெனினும், இலங்கையின் பெரும்பாலான நிறுவனங்கள் இன்னமும் யுனான் மாகாணத்தின் மிக முக்கிய வர்த்தகச் செயற்பாடுகளுக்குள் தமது முதலீடுகளை மேற்கொள்ளவில்லை எனவும் செங் சுட்டிக் காட்டினார்.

'யுனான் மாகாணமானது பொருளாதார ரீதியாக அபிவிருத்திகளை எட்டும்போது இலங்கை நிறுவனங்கள் அதிகளவில் இங்கு தம்மை நிலை நிறுத்தும் என நாம் நம்புகிறோம். இது மேலும் மிக முக்கிய வர்த்தக வாய்ப்புக்களில் ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்' எனவும் செங் குறிப்பிட்டார்.

யுனான் மாகாணமானது இலங்கையுடன் விவசாயத் திட்டம் தொடர்பாகப் பணியாற்றுவதாகவும் செங் தெரிவித்தார்.

இரு நாட்டு வர்த்தக உறவுகளுக்கும் அப்பால், கலாசாரத் தொடர்புகள் குறிப்பாக பௌத்த மதத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மிகவும் முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

யுனான் மாகாணமானது பல நாடுகள் மற்றும் பிராந்தியங்களுடன் வர்த்தக உறவுகளைப் பேணிவருகிறது. குறிப்பாக இரசாயன உற்பத்திகள், இரும்பு அல்லாத உலோகங்கள், சிகரெட்டுக்கள், தேயிலை, இயந்திரம், இலகுகருவி உற்பத்திகள் மற்றும் மருத்துவம் போன்ற பல்வேறு வர்த்தகப் பரிமாற்றத்தில் யுனான ஈடுபட்டு வருகிறது.

2014 இல், இந்த மாகாணத்தின் மொத்தத் தேசிய உற்பத்தி 1281459 பில்லியன் யுவான் ஆகும். இதேவேளையில், இதன் வெளியுறவு வர்த்தக செயற்பாடானது 29.622 பில்லியன் டொலராகும்.

மைத்திரி இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இலங்கையின் ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் வாதிகளை சீனா தனது நாட்டிற்கு வரவழைத்து அவர்களுக்கு புலமைப்பரிசிலை வழங்குவதற்கான முயற்சிகளில் ஆர்வம் காண்பிப்பதுடன், இலங்கை வாழ் மக்கள் மத்தியில் தன்னைப் பிரபலப்படுத்தும் பணியையும் சீனா ஆற்றி வருகின்றது.

சீனாவின் இந்த முயற்சிகள் இலங்கையைப் பயன்படுத்தி சீனா தனது நலன்களை அடைந்து கொள்ள முயல்வதையே சுட்டிநிற்கின்றது. தான் தேர்தலில் வெற்றி பெற்றால் சீனாவின் துறைமுக நகரத் திட்டத்தை இரத்துச் செய்வேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பரப்புரையில் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

சீனாவின் துறைமுக நகரத் திட்டம் மற்றும் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' திட்டம் (Voice of America) ஆகிய இரு திட்டங்களுக்கும் இடையில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அமெரிக்காவின் குரல் என்கின்ற திட்டமானது 1983 இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இரணவிலவில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டமானது சிலாபத்தில் பணியாற்றிய கத்தோலிக்க ஆயரின் தலைமையில் பொதுமக்களால் எதிர்க்கப்பட்டது.

அப்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் சில இடதுசாரிக் கட்சிகளும் மக்களின் இந்த ஆர்ப் பாட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கின.

1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வொய்ஸ் ஒப் அமெரிக்கா என்பது முக்கிய சுலோகமாகக் காணப்பட்டது. இவை அனைத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரித்தது. ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது துப்பாக்கிச் சூட்டை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. வொய்ஸ் ஒப் அமெரிக்காவின் நிதியுதவியுடன் அமைக்கப்படவிருந்த ஐந்து நட்சத்திர விடுதித் திட்டம் பின்னர் நிறுத்தப்பட்டது.

இந்த முக்கிய திட்டங்களே 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத் திடப்படுவதற்கான முக்கிய காரணமாக அமைந்தன. இந்தியாவின் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அமெரிக்காவின் விமர்சனத்திற்கு உட்பட்டிருந்ததால் இலங்கையில் மேற்கொள்ளப்படவிருந்த அமெரிக்கத் திட்டங்களை இந்தியா எதிர்த்தது.

1994 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது அமெரிக்க ஆதரவுத் திட்டங்கள் இரத்துச்செய்யப்படும் என எல்லோரும் கருதினர். இதனை இலக்காகக் கொண்டு அரசாங்கமானது பேச்சுக்களை நடத்தியபோதும், தன்னால் வழங்கப்படும் உதவிகளை நிறுத்திவிடுவேன் என இலங்கையை அமெரிக்கா எச்சரித்தது.

இதனால் சந்திரிகா அரசாங்கம் அமெரிக்க ஆதரவுத் திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கான அனுமதியை வழங்கியது. இதன் பின்னர், டில்லிக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு நெருக்கமடைந்தது. இதனால் அமெரிக்க ஆதரவுத் திட்டங்களை இந்தியா தொடர்ந்தும் எதிர்க்கவில்லை.

இத்திட்டங்கள் முற்றுமுழுதாக நிறைவடைந்த போது, ஐக்கிய தேசியக் கட்சியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிப் பெருமிதத்துடன் நோக்கியது.

இதேபோன்றே ராஜபக்ஷ அரசாங்கமும், இடைநிறுத்தப்பட்ட சீனத் துறைமுக நகரத் திட்டம் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை நோக்கிப் பரிகாசம் செய்கிறது. (முற்றும்)

# சுகாதார சீர்கேடுகளை உடனடியாக தடுங்கள்

## வடக்கு மாகாண சபையிடம் கோரிக்கை

கல்வியங்காடு பொதுச் சந்தையிலும் அதனை அண்டிய சுற்றுச் சூழலிலும் ஏற்பட்டுள்ள சுற்றாடல் சீர்கேடுகளை உடனடியாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குறித்த சுற்றுச்சூழல் சீர்கேடு தொடர்பான மகஜரை வட மாகாண முதலமைச்சர், வட மாகாண சுற்றுச் சூழல் அமைச்சர், வட மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோருக்கு பொதுமக்களும் சந்தையின் பயனாளர்களும் இணைந்து நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கையளித்த மகஜரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தின் அங்காடியாக திகழ்ந்த கல்வியங்காடு பொதுச் சந்தை காலப்போக்கில் பொதுச் சந்தையாகவும் யாழ்ப்பாணத்தின் இரண்டாவது பெரிய சந்தையாகவும் பரிணமித்தது.

யாழ்.நகரப்பகுதியின் எல்லையில் யாழ்.மாநகர சபையின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்தும் பல பிரதேசங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் வந்து செல்லும் சந்தையாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பொதுச் சந்தைச் சூழல் தற்போது குப்பை கொட்டும் இடமாகவும் இறந்த நாய்களை போடும் இடமாகவும் கட்டாக்காலிகளின் புகலிடமாகவும் மாறி வருவது எமக்கு மன வேதனையையும் மன உளைச்சலையும் ஏற்படுத்துகின்றது.

அண்மைக்காலமாக சந்தையில் பின்புறமாக அமைந்துள்ளகாசிப்பிள்ளைபாடசாலை வீதி குப்பை கூழங்களால் நிறைந்து காணப்படுகின் றன. இதனால் இப்பாடசாலைக்கு செல்லும் சிறு குழந்தைகள் கூட இப்பாதையை பாவிக்க முடியாமல் சுமார் 500 மீ சுற்றியே பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

அண்மையில் இவ்விடத்தில் இரண்டு இறந்த நாய்களை கூட போட்டுவிட்டு சென்றுள்ளார்கள். இது அழுகி துர்நாற்றம் வீசிய பின்னரே அகற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே சந்தையில் உட்புற சூழலும் குப்பை கூழமாகவும் சேறும் சகதியுமாக காணப்படுவது இது தினமும் வந்து செல்லும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு தொற்று நோய்களை உண்டாக்க கூடியதாகவும் உள்ளது.

சந்தையை நிர்வாகிப்பதற்கு யாழ்.மாநகரசபையால் ஒருவர் மேற்பார்வையாளராகநியமிக்கப்பட்டுள்ளபோதும் மேற்படி விடயங்கள் எவ்வாறு அவரது கண்களில் புலப்படாமல் போனதுஎன்பது கேள்விக்குறியே மேற்படி விடயங்களை அவர் உரிய அதிகாரிகளுக்குகொண்டுசென்றாரா? கொண்டு சென்று உரிய அதிகாரிகள் அசமந்தமாக இருக்கிறார்களா என்பதும் அவர்களுக்கு வெளிச்சம்.

பொது மக்கள் பலர் வாய் மூலமாக மேற்படி மேற்பார்வையாளரிடம் கூறியபோது இன்றுவரை இதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் இல்லை. இதற்கான ஓர் உடனடி யாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்து கல்வியங்காட்டு பொதுச் சந்தைக்கும் சூழலுக்கும் ஓர் விடிவை பெற்றுத்தர வேண்டுமென பொதுமக்கள் சார்பில் தங்களிடம் பணியாக கேட்டுக் கொள்கிறோம்என அந்தமகஜரில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## வலம்புரி 16ஆவது ஆண்டு நிறைவில்



அகவை பதினாறை
அடைந்துவிட்ட
வலம்புரி

வடபுலதத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் வலம்புரியும் தனக்கென ஓர் இடத்தினை பிடித்து தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஊடகப்பணி என்பது மிகவும் கடினமான சவால்களை எதிர்நோக்குகின்ற அர்ப்பணிப்பு மிக்க பணியாகும். நாட்டின் நிலவரங்களை உடனுக்குடன் மக்களிற்கு தெரிவிப்பதோடு மக்களை நல்வழிப்படுத்துகின்ற பொறுப்பு ஊடகங்களிற்குரிய தலையாய கடமையாகும்.

உண்மை, நேர்மை, உடனடித்தன்மை அவற்றுடன் கூடிய வெளிப்படைத்தன்மை என்றும் மாறாத நடுநிலைமை இவையே அவற்றின் இருப்புக்கும் வளர்ச்சிக்குமான அத்திபாரம் மட்டுமல்ல சித்தாந்தங்களும் ஆகும். இவற்றை உரிய முறையில் கடைப்பிடிக்கும் ஊடகங்களின் நாமம் மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும் என்பது நிதர்சனமாகும்.

பதினாறு வருடங்களை இனிதே கடந்து பதினேழாவது ஆண்டில் கால்பதிக்கும் வலம்புரியின் மக்கள் சேவை தொடர்ந்தும் நிலைத்திருப்பதோடு இடையறாத சேவையினால் மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பிடிக்க வேண்டும் என வேண்டி எனது இதயபூர்வமான ஆசியினையும் வாழ்த்தினையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. றூ. கேதீஸ்வரன்,
மாவட்டச் செயலாளர்,
முல்லைத்தீவு.

### மாதங்களில் சிறந்த மார்கழியில் உதித்த வலம்புரியை வாழ்த்துகிறேன்

மாதங்களில் சிறப்பானதாகக் கருதப்படும் மார்கழியில் வலம்புரி பத்திரிகை தனது 16 ஆவது அகவையை நிறைவு செய்து 17 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவது வாசகர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள், வேதாத்திரி மகரிஷியின் போதனைகள், சாயி நற்சிந்தனை, ஆன்மீகத் தகவல், இன்று ஒரு தகவல், இனியொரு பசுமைப்புரட்சி செய்வோம், வைத்திய சம்பந்தமானவைகள், குறைகேள் அரங்கு, கல்வி விடயங்கள், இன்றைய நாளின் முன்னைய பதிவுகள், பேஸ்புக் பகுதி அப்பப்பா, என்னவென்பது வலம்புரியின் மகத்தான சேவையை, இப்பத்திரிகை 17 ஆவது அகவையை மட்டுமல்ல நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவர வேண்டுமென கலட்டி வீரகத்திப் பிள்ளையாரை வேண்டி இப்பத்திரிகை நிறுவனத்தை சார்ந்த யாவர்க்கும் நமது ஆசிகளையும் நல் வாழ்த்துக்களையும் வழங்கிக் கொள்கிறேன்.

து. விவேகானந்தக்குருக்கள்
ஆலய பிரதம குரு, ஆதீனகர்த்தா

# செய்தித் துளிகள்

## புதிய பாடத்திட்டம் அறிமுகம்

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் தரம் 1, தரம் 7 மற்றும் தரம் 11 ஆகியனவற்றுக்கு புதிய பாடத் திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சமூகத்தின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு இந்த புதிய பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத் திட்டத்தில் மூன்று தரங்களுக்குமான கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 136 பாடப் புத்தகங்களை கல்வி வெளியிட்டுத் திணைக்களம் அச்சிட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பாடப் புத்தகங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள பாடப்புத்தகங்களை வழங்கும் தேசிய நிகழ்வில் மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. (இ-7)

## பட்டாசு உற்பத்தி மழையால் பாதிப்பு

அண்மையில் பெய்த கடும் மழையினால் பட்டாசு உற்பத்தி 40 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளதாக பட்டாசு உற்பத்தியினர் தெரிவித்தனர்.

அநேகமாக நத்தார் மற்றும் புதுவருட பிறப்புக் காலத்தில் பட்டாசுகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த சில மாதங்களாக தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக நாட்டின் பட்டாசு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனவும் அவற்றை உலர வைப்பது சீரற்ற காலநிலையாக பாதிப்பு அடைந்துள்ளதாகவும் பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் கண்டி மாவட்ட தலைவர் சேன தயானந்த தெரிவித்தார்.

அத்துடன் இத்துறையில் புதிய வர்களின் ஆர்வமும் இல்லை என்று தெரிவித்தார்.

பட்டாசு உற்பத்தி துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என விசனம் தெரிவித்தனர். (இ

## ஜேம்ஸ் பக்கர் இராஜினாமா

கசினோ துறையில் மிகவும் பிரலமான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் பக்கர், “கிறவுன் றிஸோட்” எனும் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து, நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராஜினாமாச் செய்தார். ஆயினும், உலக அளவில் கசினோ் துறையில் செயற்படும் கிறவுன் றிஸோட்டின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரப் பதவியொன்றில் இருப்பார்.

அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட இந்தக் நிறுவனத்தில், பில்லியனரான பக்கர், 53 சதவீத உரிமையைக் கொண்டவர்.

மெல்கோ கிறவுன் என்டர்டெய்ன்மென்ட் அன்ட் அலன் கம்பனியின் இணைத் தலைவராக அவர், தொடர்ந்தும் இருப்பார்.

இவர், அதிக காலத்தை வெளிநாடுகளில் செலவழிப்பதால், தனது பதிவியை இராஜினாமாச் செய்தார்.

“நான், சிட்னி, மெல்பேர்ன் மற்றும் லாஸ் வேகாஸ் மற்றும் கிரவுணின் இணைய செயற்பாடுகளில் எனது கவனத்தை அர்ப்பணிக்க எண்ணுகிறேன்” என அவர் தெரிவித்தார். (இ)


## ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு 100 அபிவிருத்தித் திட்டங்கள்


மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாகப் பதவியேற்று எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதியன்று ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, மேல் மாகாணத்தில் 100 அபிவிருத்தித் திட்டங்களைத் தொடக்கவுள்ளதாக, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்காக பெருமளவிலான நிதி, தொழில்நுட்பம் மற்றும் மனிதவளம் என்பன பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், இலங்கையில் 21ஆம் நூற்றாண்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திட்டத்தில் பாரியதொன்றாக இது காணப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், கட்டுநாயக்க மற்றும் மினுவாங்கொடைக்கு இடையிலான விமானநிலைய நகர் மற்றும் மாலபேயிலிருந்து ஹோமாகமை வரையிலான தொழில்நுட்ப நகர் ஆகியன அத்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. (இ)

# சிவனொளிபாதமலை யாத்திரை பருவ காலம்







சிவனொளிபாதமலை யாத்திரை பருவ காலம் நாளை 24 ஆம் திகதி அன்று பூரணை தினத்துடன் ஆரம்ப மாகவுள்ளதாக சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதன்ன தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்திற்கான சிவனொளிபாதமலை யாத்திரைப் பருவகாலத்தை ஆரம்பக்கும் முகமாக இரத்தினபுரி, பெல்மதுளை, கல்பொத்தாவெல ரஜமஹாவிகாரையில் வைக்கப்பட்டுள்ள சமன் தேவ விக்கிரமும் பூஜைப் பொருட்களும்தாங்கிய இரத பவனியாக இன்று காலை சுபவேளையில் புறப்பட்டு பெல்மதுளை, இரத்தினபுரி, கிதுல்கல, கினிகத்தேனை, வட்டவளை, அட்டன், நோர்வூட், மஸ்கெலியா, நல்லத்தண்ணி வழியாக சிவனொளி பாத மலையின் அடிவாரத்தினை இரவு வந்தடையும்.

இந்தமுறை முதல் தடவையாக 3 வீதிகளின் ஊடாக ஊர்வலம் பயணிக்கவுள்ளதாக ஏற்பாட்டு குழு வினர் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரி அவிசாவளை வீதியில் ஊர்வலம் பயணித்து அட்டன் நல்லதண்ணிஊடாக சிவனொளிபாத மலைக்கு ஒரு ஊர்வலம் பயணிக்கவுள்ளது.

மற்றைய ஊர்வலம் இரத்தினபுரி பலாபத்தல வீதி ஊடாக பயணிக்கவுள்ளது.

அதிக பக்தர்களின் கோரிக்கைகளுக்கு அமைய முதல் தடவையாக தெய்வீக ஆபரணங்களை ஏந்திய மூன்றாவது ஊர்வலம் பெல்மடுல்ல ஒப்பநாயக்க, பலங்கொட, பின்னவல, பொகவந்தலாவ ஊடாகசிவனொளிபாதமலையை அடையவுள்ளது.

அத்துடன், சமன்தேவ விக்கிரமும் பூஜைப்பொருட்களும் மலை உச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு பிரதிஷ்டை செய்ததன் பின்பு 24 ஆம் திகதி அதிகாலை நடைபெறவுள்ள விசேட பூஜைகளைத் தொடர்ந்து 2015 2016 ஆம் வருடத்திற்கான சிவனொளிபாதமலை யாத்திரைப் பருவகாலம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ)

# களவு கற்பித்த தாய்

தாயொருவர் தனது மகளுக்கு, களவெடுப்பதற்குக் கற்பித்துக் கொடுத்த சம்பவமொன்று களுத்துறை, இங்கிரியவில் உள்ள பாதணிக் கடையொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சிறுமி, குறித்த பெண்ணின் மகளா அல்லது வேறுயாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர் பில் மேலும் தெரியவருவதாவது, சனக்கூட்டம் நிறைந்திருந்த அந்தப் பாதணிக் கடைக்கு, தாயும் மகளுமாக கடந்த 20 ஆம் திகதியன்று இருவர் வந்துள்ளனர்.

அந்தப் பெண்ணுடன் வந்த சிறுமி, இலாச்சியை திறந்து 55 ஆயிரம் ரூபாவை களவெடுத்துள்ளார். அவ்வாறு களவெடுக்கும் சம்பவம், கடையிலிருக்கும் சிசிடிவி கமராவில் பதியப்பட்டுள்ளது. சிசிடிவி கமரா வில் பதியப்பட்டுள்ள காட்சிக ளின் பிரகாரம், அச்சிறுமியி னால் இலாச்சியை ஒரே தடவை யில் திறக்கமுடியவில்லை.

இதன்போது குறித்த பெண், அந்த இலாச்சியை அரை வாசிக்கு திறந்து கொடுத்துள்ளார். அதன் பின்னர், மிகவும் தந்திரமான முறையில் இலாச்சியிலிருந்து அச்சிறுமி, பணத்தைக் கொள்ளையடித்துள்ளார். அச்சிறுமி, குறித்த பெண்ணின் மகளாக் இருக்கலாம் என்று சந்தேகிக்கின்ற இங்கிரிய பொலிஸார், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக அறிவித்தனர். (இ)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 22.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.45 | 145.68 |
| பவுண்ட் | பிரிட்டன் | 209.81 | 217.60 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.39 | 159.78 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 141.53 | 147.66 |
| டொலர் | கனடா | 100.69 | 105.06 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.82 | 105.77 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.13 | 104.16 |
| ரூபா | இந்தியா | 2.1662 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.7265 |
| குவைத் | டினார் | 472.8604 |
| ஓமான் | ரியால் | 372.8835 |
| கட்டார் | ரியால் | 39.4188 |
| சவுதி அரேபியா | டிராம் | 39.0855 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ரியால் | 38.2517 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 190 | 170 | 180 | 180 | 180 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 65 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 650 | 800 | 800 | 800 |
| தக்காளி | 160 | 130 | 120 | 160 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 15-30 | 50 | 50 | 40 |
| கோவா | 160 | 160 | 110 | 140 | 160 | 120 |
| கரட் | 200 | 250 | 180 | 200-320 | 320 | 200 |
| பூசணி | 30 | 40 | 30-40 | 50 | 60 | 40 |
| புடோல் | 100 | 120 | 100 | 120 | 160 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 150 | 100 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 65 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 400-600 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 100 | 150-200 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 300 | 200 | 180 | 250-300 | 280 | 250 |
| லீக்ஸ் | 150 | 150 | 140 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 220 | — | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 400 | — | — | 300 | 480 | 500 |
| முருங்கைக்காய் | 450 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | 270 | — | 280 | 280 | — |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 130 | — | 140 | — |
| கீரை - 1 பிடி | 50 | 50 | — | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 250 | 120 | 80 | 200 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 220 | 200 | 120 | 200 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 200 | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 100 | — | 100 | 160 | 140 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | 50 | 80 | 40 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## வெலிக்கடை சிறையில் மீண்டும் சிங்களவர்கள் வெறியாட்டம் 60

புத்தர் சிலை அருகே 37 உடல்களையும் கொண்டு போய் குவித்து வைத்தனர். அப்போது ஒருவன், புத்தரே பாரும்! உம்மையும் உம் மதத்தையும் ஏற்காதவர்களுக்கு நேர்ந்த கதியைப் பாரும் என்று கத்தினான்.

**பெற்றோல் ஊற்றி எரிப்பு**

கொடூரமாகக் கொல்லப்பட்ட 37 கைதிகளின் உடல்களை அவர்களுடைய குடும்பத்தினரிடம் ஒப்படைக்காமல் மிகப்பெரிய குழிதோண்டி அதற்குள் வீசினார்கள். பின்னர் பெற்றோலை ஊற்றி தீ வைத்துக்கொளுத்தினார்கள். இதுவும் சிங்களக் கைதிகளைக் கொண்டு செய்யப்பட்டது.

இலங்கையில், வெலிக்கடை சிறையில் மீண்டும் கலவரம் மூண்டது. இரண்டு பாதிரியார்கள் உட்பட 17 தமிழர்களை சிங்கள வெறியர்கள் பயங்கர ஆயுதங்களால் தாக்கி கொன்றனர்.

கொழும்பு நகரம் அருகே உள்ளது வெலிக்கடைச் சிறைச்சாலை. அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழீழ போராளிகளான குட்டிமணி, ஜெகன், தங்கதுரை உட்பட 37 தமிழ்க் கைதிகளை 25 ஆம் திகதி அன்று சிங்களக் கைதிகளும் வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள வெறியர்களும் சேர்ந்து பயங்கர ஆயுதங்களால் தாக்கியும் கத்தியால் வெட்டியும் படுகொலை செய்தனர்.

**மீண்டும் படுகொலை**

நெஞ்சைப்பிளக்கும் இந்தச் சம்பவம் நினைவை விட்டு அகலும் முன்பே இன்னொரு பயங்கரச் சம்பவம் வெலிக்கடை சிறையில் நடந்தது.

அங்கு மேலும் 17 தமிழர்கள் அடித்துக் கொல்லப்பட்டார்கள். சிங்கள வெறியர்களின் இரக்கமற்ற அரக்கத் தனத்திற்கு அவர்கள் பலியாகி விட்டார்கள்.

**பாதிரியார்**

கொல்லப்பட்டவர்களில் இரண்டு பேர் பாதிரியார்கள், ஒருவர் வைத்தியர், ஒருவர் கல்லூரி பேராசிரியர்.

விடுதலைப்புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக அவர்களை இலங்கைப் பொலிஸார் கைது செய்து காவலில் வைத்திருந்தார்கள்.

காந்திய இயக்கத்தைச் சேர்ந்தவரான சோமசுந்தரம் ராஜசுந்தரமும் கொல்லப்பட்டவர்களில் ஒருவர்.

**லண்டன் தகவல்**

இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் தொலைபேசித் தொடர்பு அடியோடு துண்டிக்கப்பட்டு விட்டது.

எனவே இலங்கையில் உள்ளவர்கள் லண்டன், சிங்கப்பூர் முதலிய இடங்களில் உள்ள நண்பர்களுக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்தார்கள். அங்கிருந்து சென்னைக்கு வந்த தகவல்கள் வருமாறு:-

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் அட்டூழியம் உச்ச கட்டத்தை எட்டியது.

**நிற்க வைத்து சுட்டனர்**

யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்த ஆண், பெண், குழந்தைகள் அனைவரையும் வீட்டுக்கு வெளியே வரச் செய்து வரிசையாக நிற்க வைத்து சுட்டுக்கொன்றார்கள்.

கண்டியில் தமிழ் தோட்டத் தொழிலாளர்களையும் மற்ற தமிழர்களையும் இராணுவத்தினர் வேட்டையாடி சுட்டுக் கொன்றார்கள்.

கண்டியில் மட்டும் இறந்த தமிழர்களின் எண்ணிக்கை 500 இற்கும் மேல் இருக்கும் என்று தெரிகிறது.

இன்னும் ஒரு வாரம் இதே நிலை நீடித்தால் இலங்கையில் தமிழர்களே இல்லாத படி பூண்டோடு ஒழிக்கப்பட்டு விடுவார்கள் என்று இலங்கையில் உள்ள தமிழர்கள் நெஞ்சம் பதை பதைக்க தொலைபேசியில் லண்டனில் உள்ள தமிழர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு லண்டன் தகவல்கள் கூறின.

**வாய்ப்பூட்டுச் சட்டம்**

இலங்கையில் நடக்கும் கொடுமைகளை பிரசுரிக்காத படி இலங்கை பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டது.

வெளிநாடுகளுக்கும் செய்தியோ, படங்களோ கொடுக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. இதனால் வீடுகள் பற்றி எரிந்ததை யாரும் படமெடுக்க முடியவில்லை. படம் எடுப்பவர்களை இராணுவத்தினரும் சிங்களவர்களும் தடுத்து விடுகிறார்கள்.

படம் எடுப்பவர்களுடைய கமராக்களையும் உடைத்து நொறுக்கினார்கள்.

**தண்ணீரில் விஷம்**

இலங்கையில் விநியோகிக்கப்படும் தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டுள்ளதாக இலங்கை முழுவதும் பொது மக்களிடம் பீதி பரவியது.

இது தவறான தகவல் என்றும் பரிசோதனை செய்யப்பட்ட பிறகே தண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது என்றும், அதில் விஷம் எதுவும் கலக்கப்படவில்லை என்றும் இலங்கை அரசு அறிவித்தது.

**ஊரடங்குச் சட்டம்**

ஊரடங்குச் சட்டம் காலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்டது. அரிசி, பலசரக்கு, காய்கறி முதலிய அத்தியாவசிய பொருட்கள் வாங்க மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

தீயில் எரிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் ஏராளமான கடைகள் நாசமாகி விட்டதால் எஞ்சியுள்ள கடைகளுக்கு முன் நீண்ட வரிசைகள் நின்றன.

மீண்டும் மாலை 4 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிற்பகல் 2 மணிக்கே கொண்டு வரப்பட்டது.




(தொடரும்)

நீங்கள் ஒரு தீர்மானம் செய்வதற்கு முன்பு நூறு தடவை சிந்தியுங்கள். ஆனால் ஒரு தீர்மானத்துக்கு வந்த பின் ஒரே மனிதரைப் போல் அதனை ஆதரித்து நிற்பீர்களாக. - முஹம்மதலி ஜின்னா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ் எங்கள் உயிர் என்றால் எங்கள் தார்மீகக் கடமை என்ன?

தமிழுக்கு அமிழ்து என்று பெயர். அமிழ்து என்பதை திரும்பத்திரும்பச் சொல்லிப் பாருங்கள். அமிழ்து என்பது தமிழ் என்று ஒலிப்பதை உணர்வீர்கள். இதனால்தான் தமிழும் அமிழ்தும் ஒன்று என்றாயிற்று. எங்களின் உயிராக இருக்கக்கூடிய தமிழ் இன்று எத்துணை துயரங்களைச் சந்தித்துள்ளது. ஒரு காலத்தில் தமிழர்கள் தமது உரிமைக்காக, பேரினவாதத்துடன் மட்டுமே போராட வேண்டியிருந்தது. ஆனால் இன்று நிலைமை அதுவன்று. தமிழ் வாழ்வதற்காக இன்று பலருடன் போராட வேண்டிய துர்ப்பாக்கியநிலை இருக்கிறதே அதுதான் மிகப்பெரிய துன்பம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சுயநல வாழ்வு வாழுகின்ற அர்ப்பத்தனங்கள் எந்த வித கூச்சமுமின்றி அரங்கேறியுள்ளபோது, பாவம் தமிழினம் என்று சொல்வதைத்தவிர வேறு எதுவும் நமக்குத் தெரியவில்லை. நடந்து முடிந்த போராட்டங்களில் பின்பான எங்கள் நிலைமை எப்படி உள்ளது என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். எங்களின் இனம் மீண்டும் தழைப்பதற்கான வழி வகைகள் ஏதேனும் தெரிகிறதா?

நாட்டின் தலைநகரில் இருந்து கொண்டு தமிழ் அரசியல் வியாபாரம் நடந்தேறுகின்ற போதிலும் எங்கள் புத்திஜீவிகள், சமூக அக்கறை கொண்டவர்கள் மௌனமாகவே இருந்து விடுகின்றனர்.

இத்தகையதொரு ஆபத்தான சூழ்நிலையில் இருந்து தமிழினம் தப்பிப் பிழைத்து தலைநிமிர வேண்டுமாயின் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தங்களின் உரிமையை ஜனநாயக ரீதியில் பெறுவதற்காக குரல் கொடுக்க வேண்டும்.

நம் அரசியல் தலைவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நாம் நம்பி அனைத்துப் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்து விட்டால்; அரசியல் தலைகளுக்கு பேரம் பேசுகின்ற இந்தக் காலகட்டத்தில் எங்கள் நிலை என்னவாவது.

ஆகையால் அன்புக்குரிய தமிழ் மக்களே! எல்லாக் காலமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பது மடமைத்தனம். அதேநேரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்று இலங்கை அரசுக்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுக்கின்ற இந்த வேளையில், நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டும். இந்தத்தீர்வோடு எங்கள் மக்கள் இந்த நாட்டில் நிம்மதியாக-சுதந்திரமாக வாழ்வதற்கு வழி காணப்பட வேண்டும்.

இதற்காகவே தமிழ் மக்கள் பேரவை உதயமாகியிருக்கிறது. அரசியலில் இறங்கினால்தான்-தேர்தலில் நின்றால்தான்-கட்சி அமைத்தால்தான் தமிழ் மக்களின் உரிமை பற்றி பேசமுடியுமா என்ன?

தமிழ் மக்களின் பொது அமைப்பாக இருந்து கொண்டும் உரிமைக்காக குரல் கொடுக்க முடியும். இந்திய தேசத்துக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த அண்ணல் காந்தி அரசியல் நடத்தினாரா என்ன?

ஆக, அரசியலில் இருந்து கொண்டு அதன் மூலமே பேரம் பேச முடியும் என்ற பிழையான கற்பிதங்களை காட்டியதன் பயனாக, தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்பை அரசியல் கட்சியாகப் பார்க்கின்ற துரதிர்ஷ்டம் நடந்து கொண்டிருக்கிறது.

எதுவாயினும் அன்புக்குரிய புத்திஜீவிகளே! தமிழ்ப் பற்றாளர்களே! தமிழ் மக்கள் பேரவைக்கு உங்கள் ஆலோசனைகளைக் கொடுத்து ஒரு வலுவான-நடைமுறைக்குச் சாத்தியமான-நிரந்தரமான அரசியல் தீர்வை உருவாக்குங்கள். அதனை சிங்கள மக்கள் மத்தியிலும் எடுத்துச் சென்று அன்புக்குரிய சிங்கள மக்களே! இலங்கைத் தீவில் நாங்கள் சுதந்திரமாக வாழ்வது உங்களுக்கு இடைஞ்சலா? என்று கேளுங்கள். உங்களுக்குரிய உரிமைகள் எங்களுக்கு இருப்பதை நீங்கள் எதிர்ப்பது நியாயமா? என்று வினவுங்கள்.

எங்களின் நியாயமான தீர்வுத்திட்டம் இதுதான். இதை நிறைவேற்ற உங்கள் ஆதரவைத் தாருங்கள். நீங்களும் நாங்களும் சேர்ந்து இலங்கைத் திருநாட்டை வளப்படுத்துவோம் என்று கூறுங்கள்.

# இந்தியா-இலங்கை இடையே பயணிகள் கப்பல் சேவை

## விரைவில் ஆரம்பமாகும் என தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, இரு நாடுகளினதும், அமைச்சர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலும், இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலும், கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட புதிய கடல் வழித்தடங்களை விரைவில் ஆரம்பிக்க இந்திய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக இந்தியாவின் கப்பல் போக்குவரத்து இணையமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தியா- இலங்கை இடையேயான கப்பல் போக்குவரத்து சேவைகள் விரைவில் தொடங்கப்படும் என்று இலங்கையின் துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவுக்கும் மற்றும் வடஇலங்கைக்கும் இடையேயான உறவுகளை ஊக்குவிக்கவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. தென்னிந்தியாவில் இருந்து வட-இலங்கைக்கு விமானம் மூலம் பயணிப்போரின் சிரமங்களை போக்க இந்தத் திட்டம் உதவும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த கப்பல் சேவைகள் தொடங்கப்பட்டால், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்ப விரும்பும் இலங்கை அகதிகளுக்கு அது மிகப்பெரிய வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் என்று இலங்கையில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா ஆணையத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# கூட்டுறவுச் சங்கத்தை உடைத்து பொருட்கள் பல கொள்ளையடிப்பு

(கரணவாய்)

கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் ரூபாய் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பலசரக்குப் பொருட்களை கொள்ளையடித்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வடமராட்சி - உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் கப்பூது கிளைச் சங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

வழமைபோல சங்கத்தை பூட்டிச்சென்ற சங்க முகாமையாளர் நேற்றுக் காலை சங்கத்தை திறக்கச் சென்றபோது கதவுகள் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளதை கண்ணுற்றுள்ளார்.

இதுதொடர்பாக உடனடியாக நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-5,60)

# துவிச்சக்கரவண்டி திருடப்பட்டது

(கரணவாய்)

பிரதேச சபையொன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரது துவிச்சக்கரவண்டி நேற்றைய தினம் திருடப்பட்டுள்ளதாக அவ்ஊழியரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையில் கடமையாற்றி வருகின்ற ஊழியர் ஒருவரது துவிச்சக்கரவண்டியே இவ்வாறு பறிகொடுக்கப்பட்டுள்ளது.

துவிச்சக்கரவண்டி பூட்டப்படாது நிறுத்தப்பட்ட சமயத்திலே திருட்டுப் போயுள்ளது என அவ்ஊழியரால் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-புனிதநகரைச் சேர்ந்த அவ்ஊழியர் குறித்த துவிச்சக்கரவண்டியை புதிதாக வாங்கி 2 நாட்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (செ-5,60)

# கொள்ளைச் சம்பவம் சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த வருடம் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபர் யாழ்.நகரப்பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் யாழ்.நீராவியடி பிள்ளையார் கோயில் முன்பாகவிருந்த வீட்டில் உட்புகுந்த கொள்ளையர்கள், உரிமையாளர்களான கணவன் மற்றும் மனைவியை கட்டி வைத்துவிட்டு, அங்கிருந்த பெறுமதியான நகைகள், மடிக்கணணி மற்றும் பணத்தினை கொள்ளையிட்டு தப்பிச் செல்ல முயன்ற பொழுது, தமது மோட்டார் வண்டியை விட்டுவிட்டு தப்பிச் சென்றார்கள்.

இந்நிலையில், இக்கொள்ளை தொடர்பில் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், அவர்களால் கைவிட்டுச் சென்ற மோட்டார் வாகனம் மாத்திரம் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட மோட்டார் வண்டியின் உரிமையாளர் யாரென்று அறியும் நோக்கில் இதுவரை காலமும் நடத்தப்பட விசாரணைகளின் பிரகாரம், நேற்று யாழ்.நகரப் பகுதியில் வைத்து சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாவும், குறித்த நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

# இந்திய மீனவர்கள் 4 பேர் கைது

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நால்வரை இலங்கைக் கடற்படை நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கைது செய்தது. தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அங்குள்ள கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் நேற்றுக் காலை, மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை ஜனவரி 4 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு, மன்னார் நீதவான் ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார். இதன் போது அங்கு வருகை தந்த, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், குறித்த மீனவர்களை பார்வையிட்டதோடு, அவர்களின் முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர். (செ-11)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## என்றும் உண்மையே பேசுங்கள்




✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவலகத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக்கூடாது. கபட வேடத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்துவிட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று “அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!” என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்துபோய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளிவந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேடம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

# சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து நியூசிலாந்து கப்டன் மக்கலம் ஓய்வு



அனைத்து விதமான சர்வதேச போட்டிகளில் இருந்தும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறும் அவுஸ்திரேலிய அணி உடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் நியூசிலாந்து வீரர் பிரண்டன் மெக்கல்லம் ஓய்வு பெற உள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் மெக்கல்லம் தனது 100-வது டெஸ்ட் போட்டியை விளையாடவுள்ளார். இந்த போட்டி பெப்ரவரி12 ஆம் திகதி நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து இரண்டாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 20 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த போட்டியுடன் மெக்கல்லம் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து வெற்றி பெற்ற மறுநாளே மெக்கல்லம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பை இருபது -20 போட்டிகளில் அவர் விளையாட மாட்டார். அவருக்கு பதிலாக கனே வில்லியம்ஸ் நியூசிலாந்து அணியின் கப்டனாக செயற்படுவார்.

இருப்பினும் உலகக் கோப்பை இருபது-20 தொடர் வரை மெக்கல்லம் விளையாட வேண்டுமென்று நியூசிலாந்து கிரிக்கெட் அணி வலியுறுத்தி வருகிறது.

இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மெக்கல்லம் 6 ஆயிரத்து 273 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஒரு இன்னிங்சில் அதிகபட்சமாக ஸ்கோர் 302 ஓட்டங்கள். இதேபோல் 254 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 5 ஆயிரத்து 909 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அதிகபட்ச ஸ்கோர் 166.

ஐபிஎல் போட்டிகளிலும் தனது அதிரடி ஆட்டம் மூலம் நட்சத்திர வீரராக திகழ்ந்து வருபவர். கொல்கத்தா, கொச்சி, சென்னை ஆகிய அணிகளுக்காக விளையாடி உள்ளார். இதனிடையே, அடுத்த ஆண்டு நடைபெற உள்ள 9 ஆவது ஐபிஎல் தொடரில் ராஜ்கோட் அணிக்காக மெக்கல்லம் விளையாட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பாகிஸ்தான் சுப்பர் லீக் கராச்சி அணியில் ஆமிர்

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் சார்பில் பாகிஸ்தான் சுப்பர் இருபது 20 லீக் தொடர் பெப்ரவரி மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளில் நடைபெற இருக்கிறது.

இதில் பங்கு பெறும் ஐந்து அணிகளுக்கான ஏலம் கடந்த சில நாட்களுக்கு முன் நடைபெற்றது. இதில் பெஷாவர் ஷல்மி, கராச்சி, இஸ்லாமாபாத் யுனைடெட், குவெட்டா கிளாடியேட்டர்ஸ், லாகூர் காலண்டர்ஸ் அணிகள் தேர்வாகின.

இந்த அணியில் இடம் பெறும் வீரர்களுக்கான ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிளாட்டினம் பிரிவில் இடம்பெற்ற அப்ரிடி, சோயிப மாலிக், வாட்சன், கெவின் பீட்டர்சன், கிறிஸ் கெய்ல் ஆகியோரை முறையே பெஷாவர், கராச்சி, இஸ்லாமாபாத் யுனைடெட், குவெட்டா கிளாடியேட்டர்ஸ் மற்றும் லாகூர் காலண்டர்ஸ் அணிகள் தேர்வு செய்தன. இவர்களுடன் ரியாஸ் வஹாப், டேரன் சமி, சாஹிப் அல் ஹசன், சோஹைல் தன்வீர், அந்த்ரே ரஸல், மிஸ்பா உல் ஹக், சர்பிராஸ் அஹமது, அஹமது ஷேசாத், டிவைன் பிராவோ, உமர் அக்மல் ஆகியோரும் பிளாட்டினம் பிரிவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


அதன்பின் டைமண்டு, கோல்டு பிரிவில் இடம்பெற்றிருந்த வீரர்களை ஏலத்தில் எடுத்தனர்.

சமீப காலமாக வேகப்பந்து வீச்சில் மிரட்டி வரும் வங்காள தேசத்தின் முஷ்டாபிஜுர் ரஹ்மானை லாகூர் அணி கோல்டு பிரிவில் இருந்து எடுத்துள்ளது. வங்காளதேசத்தைச் சேர்ந்த தமீம் இக்பால் இதே பிரிவில் இருந்து பெஷாவர் அணி எடுத்துள்ளது. சாஹிப் அல் ஹசனை கராச்சி அணி வாங்கியுள்ளது.

லாகூர் அணியை தனக்குள்ள ஐந்து வெளிநாட்டு வீரர்களை முழுவதுமாக தேர்வு செய்துள்ளது. அதில் கெய்ல், முஷ்டாபிஜுர் ரஹ்மான், டிவைன் பிராவோ, கெவோன் கூப்பர் மற்றும் கமரூன் டெல்போர்ட் ஆகியோர் அடங்குவார்கள்.

ஆனால் மூத்த வீரர் யூனிஸ் கான் மற்றும் சயீத் அஜ்மல் ஆகியோர் ஏலம் போகவில்லை. பாகிஸ்தான் டெஸ்ட் அணி கப்டன் மிஸ்பா உல் ஹக் இஸ்லாமாபாத் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இன்று சில்வர் மற்றும் அதன்பின் உள்ள பிரிவுகளில் இடம் பெற்றுள்ள வீரர்கள் ஏலத்தில் விடப்படுவார்கள். (க)



# மெஸ்ஸியிடம் தகராறில் ஈடுபட்ட ரசிகர்கள்



ஆர்ஜென்டீனா காற்பந்தாட்ட அணியின் அணித்தலைவரான மெஸ்ஸியிடம் ரிவர்பிளேட் அணி ரசிகர்கள் தகராறு செய்துள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி ஜப்பானில் உள்ள கோயஹாமா நகரின் கிளப்பில் உலக்கிண்ண காற்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில், பார்சிலோனா மற்றும் ஆர்ஜென்டீனாவை சேர்ந்த ரிவர்பிளேட் அணி மோதியது.

இதில், ரிவர்பிளேட் அணியை 3-0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

போட்டி முடிந்ததையடுத்து நேற்று முன்தினம் பார்சிலோனா அணி டோக்கியோவில் இருந்து ஸ்பெயினுக்கு புறப்பட்டது. இதற்கான டோக்கியோ விமான நிலையத்துக்கு பார்சிலோனா அணி வீரர்கள் சென்றபோது, விமான நிலையத்தில் இருந்த சில ரிவர்பிளேட் அணி ரசிகர்கள், லயனல் மெஸ்சி யிடம் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

மெஸ்சியும் பதிலுக்கு அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, ரிவர்ப்ளேட் நட்சத்திர வீரர்கள் மற்றும் அந்த அணியின் இயக்குநர்கள், மேலாளர் லூயிஸ் என்ரிக் ஆகியோர், ஆர்ஜென்டீனா ரசிகர்களின் செயலை கண்டித்துள்ளனர்.

மேலும் ரிவர் பிளேட் அணியின் செயலாளர் Rodolfo D'Onofrio, சில ரசிகர்கள் முட்டாள்தனமாக நடந்துகொண்டாலும், மெஸ்ஸி ஒரு பண்புள்ள மனிதர் என்று கூறியுள்ளார். (க)

# ஐ.எஸ்.எல். வெற்றிக்கிண்ணத்தை சென்னை மக்களுக்கு அர்ப்பணிப்பு

## உரிமையாளர் அபிஷேக்பச்சன்




ஐ.எஸ்.எல். போட்டியில் வென்ற கிண்ணத்தை சென்னை மக்களுக்கு அர்ப்பணிக்கிறோம் என்று அணியின் உரிமையாளர் அபிஷேக பச்சன் தெரிவித்துள்ளார்.

2-வது இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) காற்பந்து போட்டியில் சென்னை அணியினர் கிண்ணத்தை வென்றனர்.

இந்த வெற்றி குறித்து அபிஷேக் பச்சன் கூறியதாவது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்காக பிரார்த்தனை செய்வோம், சிறப்பாக விளையாடுவோம் என்று எங்கள் அணி தெரிவித்து இருந்தது.

அதன்படி , த்ரில்லிங்கான இறுதிப்போட்டியில் கோவாவை தோற்கடித்து ஐஎஸ்எல் கிண்ணத்தை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது, இந்த வெற்றியையும், கிண்ணத்தையும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போராட்ட குணம் கொண்ட சென்னை மக்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

மேலும், இந்த போட்டிக்கு ஆதரவு அளித்த சென்னை அணியின் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம் என்று கூறியுள்ளார். (க)

## ஆணைக்குழுவின்...

விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இந்த வருடத்திற்கான இறுதி அமர்வு யாழ்.மாவட்டத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அடுத்த அமர்வு தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அடுத்த வாரமளவில் சந்திக்கவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் சில பிரதேச செயலகங்களில், ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறவில்லை எனவும் அது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் எச் டப்ளியூ குணதாச குறிப்பிட்டார். (செ-11)

## வயல் நிலங்களுூ...

குறித்த பகுதியில் பல ஏக்கர் நிலங்களில் மக்கள் நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்டு வரும் நிலையில் அப்பகுதியில் பலமிதிவெடிகள் இருப்பதை விவசாயிகள் கண்டுள்ளனர். இதனால் தமக்கும் தமது கால்நடைகளுக்கும பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அப்பகுதி பாதுகாப்பற்ற பிரதேசம் என அடையாளப்படுத்தாமல் இருந்த காரணத்தால மக்கள் அதில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால் தற்போது ஆங்காங்கே மிதிவெடிகள் காணப்படுவதால் அச்சமடைந்த மக்கள் தமது பாதுகாப்பை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்துமாறும் மிக விரைவாக மிதிவெடிகளை அகற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ-9)

## மீன்பிடித் தடை...

யோசனையை வரும் ஒரு சில மாதங்களில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு வரவு செலவு திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஐரோப்பிய சங்கத்தின் தொழில்நுட்ப குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்தது. அவர்கள் எமது நடவடிக்கைகள் தொடர்பில் பாராட்டியுள்ளனர். நல்ல சிபாரிசுகளை முன்வைக்க இணங்கினர். அவர்களிடம் ஜனாதிபதி தற்போது எம் மீது விதிக்கப்பட்டிருக்கும் மீன்பிடி தடையை நீக்குமாறு வேண்டுகோள் ஒன்றினை விடுத்தார்.

அது தொடர்பில் வரும் ஒரு சில மாதங்களிற்குள் குறித்த தடையை நீக்கக்கோரி கோரிக்கை ஒன்று ஐரோப்பிய பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட உள்ளது. இத்தடையின் மூலம வருடா வருடம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டம் ஏற்பட்டது. மீன்பிடி கைத்தொழில் பாரிய வீழ்ச்சி கண்டது. எதிர்வரும் காலங்களில் இவை அனைத்திலிருந்தும் விடுபடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், அமைச்சரவை மற்றும் தேசிய அரசாங்கம் என்பவற்றின் மூலமே இவ்வாய்ப்பு கிடைக்கபெற்றுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## வான்வழி மூலமா...

ங்க மற்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரின் தலைமையில் இந்த கண்காணிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி பொருளாளரின் செயலாளர் சந்திரா ஏக்கநாயக்க, சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகம் சூலானந்த பெரேரா, அரச வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர். சோமசிங்க, துறை முக அதிகாரியின் முகாமைத்துவ பணிப்பாளர் சரத் குமார பிரேமசந்திர உள்ளடங்கலாக அரசாங்க அதிகாரிகள் பங்கு கொண்டார்கள்.

இறக்குமதி பொருட்களை பரிசோதிக்கும் பொருட்டு கொழும்பு துறைமுகத்தில் பொருத்தப்படவுள்ள புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்கேன் கருவிகளை பொருத்துவதற்கு உகந்த இடத்தை தேர்வு செய்வதே இக்கண்காணிப்பு நடவடிக்கைகளின் பிரதான குறிக்கோளாகும்.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியளவில் இந்த ஸ்கேன் கருவிகளை கொழும்பு துறைமுகத்தின் உரிய இடத்தில் பொருத்த வேண்டும். அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அனைத்து பொருட்களும் ஸ்கேன் பரிசோதனைக்குட்படும். இந்தச்செயன முறையின் மூலமாக நாட்டிற்குள் கொண்டு வருகின்ற அனைத்து பொருட்களையும் பரிசோதிக்கும் செயன்முறை இலகுவாக்கப்படும்.

மேலும் இப்பரிசோதனைகள் மூலமாக இந்நாட்டிற்குள் கொண்டுவரப்படும் சட்டவிரோத பொருட்களை அடையாளம் காண்பது இலகுவாக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

## குரோதப் பேச்...

வெளியிடுவதை தடைசெய்வதற்கான சட்ட மூலம் ஒன்று அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் பொதுபல சேனா உள்ளிட்ட அடிப்படைவாத அமைப்புகளின் அழுத்தம் காரணமாக பின்னர் அந்தச் சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டது.

இந்நிலையில் குறித்த சட்டமூலத்தை சர்வதேச பிரமாணங்கள் மற்றும் மனித உரிமைகள் பிரகடனங்களுக்கு அமைவாக திருத்தம் செய்து மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

அத்துடன் குறித்த சட்டமூலத்தில் எந்தவொரு நபருக்கு எதிராகவும்பகைமையைத்தூண்டவோ, வன்முறை மற்றும் மத துவேசத்தை விதைக்கும் வகையில் தூண்டுதல்களை மேற்கொள்ளவோ, தேசிய மற்றும் இனவாத செயற்பாடுகளை மேற்கொள்ளவோ, யுத்தத்தை ஊக்குவிப்பதோ தடை செய்யப்பட வேண்டும் என்ற சரத்தையும் புதிதாக குறித்த சட்டமூலத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில்போதிய சாட்சியங்கள் இருக்கும் பட்சத்தில் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (செ-11)

## தமிழ் மக்கள்...

இனப்பிரச்சினைக்கான தீர்வு இழுபட்டுக் கொண்டுபோகும் நிலைமை காணப்படுவதால வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள புத்திஜீவிகள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உந்துசக்தியாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ் மக்கள பேரவையை உருவாக்கியுள்ளார்கள். இப்பேரவையின் நோக்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை இணைந்து தீர்க்க வேண்டும்.

அம்மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதேயாகும். இப்பேரவையானது வடக்குக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. வடக்குக்கும் கிழக்குக்கும் சொந்தமானது.

வட மாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸவரன் இப்பேரவையை ஆரம்பித்ததாக சிலர் எண்ணுகின்றனர். ஆனால், அவர் இதை ஆரம்பிக்கவில்லை. சில தமிழ்ப் புத்திஜீவிகள் இணைந்து ஏற்பாட்டுக்குழுவாக இருந்து இதை ஆரம்பித்தனர். இதற்கு வட மாகாண முதலமைச்சர் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள புத்திஜீவிகளையும் அழைத்திருந்தனர். இப்பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இப்பேரவை மூன்று இணைத் தலைவர்களைக் கொண்டதாக அமையுமென கூறப்பட்டது. இந்நிலையில், வடமாகாண முதலமைச்சர் மற்றும் நான் உட்பட மூவர் இணைத்தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டோம். இந்த பேரவையில் 30 அங்கத்தவர்கள் இருந்தாலும், எதிர்காலத்தில் ஆர்வமுடையவர்களையும் சேர்த்துக்கொண்டு இது செயற்படவுள்ளது எனத் தெரிவித்தார். (ந)




ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்தி காணாமல்போகச் செய்தவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 5 இராணுவ புலனாய்வு அதிகாரிகளை வெலிக்கட சிறைச்சாலையில் முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று சந்தித்து பார்வையிட்ட போது...

## பெண்கள், இளைஞர்கள் பிரதிநிதி...

யின் உருவாக்கத்தை தமிழ்சிவில் சமூக அமையம் வரவேற்பதோடு இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முயற்சியில் பங்கெடுப்பதிலும் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

தமிழர்களின் அரசியல் போராட்டம் தனிநபர், கட்சி மற்றும் தேர்தல் அரசியலை கடந்து சிவில் சமூக மற்றும் அரசியல் வெளிகளை உள்ளடக்கி மக்கள் அரசியலாக பரிணாமம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த 6 வருடங்களாக தமிழர்கள் மத்தியில் சிவில் சமூகவெளியை பலப்படுத்தும் முயற்சியில் தமிழ் சிவில் சமூக அமையம் தன்னாலான பணிகளை செய்து வருகிறது.

தொடர்ந்து சிவில் சமூக வெளியூடாக தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் பணிகளை தமிழ் சிவில் சமூக அமையம் தொடரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேவேளை சமாந்திரமாக சிவில் சமூக மற்றும் அரசியல் வெளியை ஒன்றிணைக்கும தமிழ் மக்கள் பேரவையின் முயற்சிக்கும் நாம் பங்களிப்போம்.தமிழ் மக்கள் பேரவையானது தமிழ்த் தேசிய அரசியலில் ஆத்மார்த்தமாக செயற்படும் அனைத்து தரப்பினரையும் உள்வாங்க வேண்டும் என நாம் கருதுகிறோம்.

குறிப்பாகப் பெண்களினதும் இளைஞர்களினதும் பிரதிநிதித்துவம் பேரவையில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதில் நாம் ஆத்மார்த்தமாக வேலை செய்வோம். நலிவடைந்த சமூகங்களினதும், பாதிக்கப்பட்ட மக்களினதும் பிரதிநிதித்துவம் தமிழ் மக்கள் பேரவையில் உள்ளடக்கப்படுவதிலும் அது உண்மையான மக்கள் இயக்கமாக பரிமாணிப்பதிலும் நாம் முழுமூச்சுடன செயற்படுவோம்.

மக்கள் பங்குபற்றலை தமிழர் அரசியலில் சாத்தியப்படுத்தலே தமிழ் மக்கள் பேரவையின் தலையாய குறிக்கோளாக இருக்க நாம் எமது பங்களிப்பை நெறிப்படுத்துவோம். எமது கூட்டு அனுபவத்தையும் அறிவையும் ஒன்று சேர்த்து புதிய சிந்தனைகளுக்கான களமாக தமிழ் மக்கள் பேரவை அமைய நாம் எமது பங்களிப்பை வழங்குவோம்.

நல்லாட்சி என்ற பெயரால் மூடிய கதவுகளின் பின்னால் எமது அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எமது மக்களுக்கான தீர்வு மக்கள் மன்றத்தில் வைத்து விவாதிக்கப்பட்டு அதன் பின்னரே எமது மக்களின் முன்மொழிவாக முன்வைக்கப்பட வேண்டும்.

அரசியல் தீர்வுக்கான தேடலில் தமிழ் மக்களின் பங்குபற்றலை ஏதுப்படுத்துதல் தமிழ் மக்கள் பேரவையின் உடனடி வேலைத் திட்டங்களில் ஒன்றாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அனைத்து தரப்பினரையும் உள்வாங்கும் எண்ணத்துடன் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவையை கட்சி அரசியல் நோக்கம் கொண்டதென காட்டும் முயற்சிகளையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

எதனையும் தேர்தல் அரசியலாகவும் கதிரைப் போட்டிக்கான அரசியலாகவும் பார்க்கும் அரசியல் தலைமைகள் தொடர்ந்து சிவில் சமூக வெளியை தமக்கு எதிரானதாகக் கருதி வந்துள்ளதோடு டிக்கள் மயப்பட்ட அரசியலை விரும்பாதவர்களாகவும் இருந்து வந்துள்ளனர்.

தேர்தலில் மக்களின் வாக்குகள்ள பெற்றுக் கொள்வதோடு இவர்களினது சனநாயகம் தொடர்பான விளங்கிக் கொள்ளல்கள் முற்றுப் பெறுவது எமது அரசியலின் சனநாயக போதாத்தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவர்களது எதிர்ப்பையும் அரசியல் சுயலாபங்களையும் கடந்து தமிழ் மக்கள் பேரவையின் நேக்கங்கள் ஈடேற அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென வேண்டுகிறோம் என தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களான குமார வடிவேல் குருபரன், எழில்ராஜன் ஆகியோர் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## இராணுவ பிடி...

இலங்கைக்கான 3 நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் கலாநிதி ஏமி சீரைட், மனித நேய உதவி, இயற்கை அனர்த்தங்களில் உதவுதல், மற்றும் வெளிநாட்டு அமைதிகாக்கும் செயற்பாடுகளில் அதிகரித்த பங்கேற்பு என்பவற்றில் இலங்கை பாதுகாப்புப் படையினர் வகிக்கக் கூடிய எதிர்கால வகிபாகம் குறித்து ஆராய்ந்ததாக, அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட ஊடக அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதுகாப்பு துறை மறுசீரமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் செயற்பாடுகளுக்கு பயிற்சியளித்தல் தொடர்பில், இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்ராங்கனி வாகீஸ்வர ஆகியோரை, பிரதி உதவிச் செயலாளர் சீரைட் சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன், கூட்டுப் படைகளின் தளபதி மற்றும் முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்த பிரதி உதவிச் செயலாளர் சீரைட் , காணிகளை திரும்ப வழங்குதல், நல்லிணக்கம் மற்றும் நம்பகமான நீதி பொறியமைப்புக்கான தேவையை வலியுறுத்தியதுடன், எதிர்கால பாதுகாப்பு தேவைகள் குறித்தும் பேசினார்.

மேலும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை சந்திப்பதில் முன்னுரிமை வழங்கிய பிரதி உதவிச் செயலாளர் சீரைட், "இராணுவக் கொள்கை மற்றும் பாதுகாப்பு உறவுகளை தெரிவிப்பதில் சிவில் சமூகங்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன" என்ற கருத்தினை வலியுறுத்தினார்.

இந்நிலையில், இராணுவத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போது, நம்பகத் தன்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களது கரிசனைகளையும் அவர் வெளிப்படுத்தினார்.

நிலக்கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலக்கண்ணி வெடி அகற்றல் குறித்து கலந்துரையாடிய அவர், "இலங்கையில் நிலக்கண்ணி வெடி பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதில் அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது என தெரிவித்ததாக அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நிலக்கண்ணி வெடி அகற்றலுக்காக 6 பில்லியன் ரூபாய்களை (43 மில்லியன் அமெ. டொலர்) உதவியாக அமெரிக்கா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# சுற்றாடல் வளங்களைப்...

குறிப்பிட்டுள்ளார்.

சூழலில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் குறித்து மற்றும் அழிவுகள் குறித்து சூழலியலாளர்களும் பொதுமக்களும் உடனடியாக தெரிவிக்கக்கூடிய வகையில் குழுவொன்றை அமைப்பதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுற்றாடல், வனவளங்கள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளை இந்தக் குழுவில் இணைத்துக்கொள்வதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது. வில்பத்து பகுதியில் இடம்பெற்ற சுற்றாடல் அழிப்பு நடவடிக்கைகளை ஜனாதிபதியின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டுள்ளதோடு மீண்டும் காடழிப்பு நடவடிக்கைகள் இடைக்கிடையே இடம்பெறுவதாகவும் சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை வடமேல் மாகாணத்தில் இடம்பெறுகின்ற சுற்றாடல் அழிப்பு நடவடிக்கைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும் சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி துறைமுகங்கள் மற்றும் நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளதோடு எதிர்காலத்தில் அபிவிருத்தி திட்டங்களின் போது ஆய்வு அறிக்கைகளை பெற்றுக் கொண்டு உரிய முறையில் ஆராய்ந்த பின்னரே அவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

(செ-11)


O/L பரீட்சையில் நல்ல பெறுபேறு எடுத்தும்
A/L பரீட்சையில் தேறவில்லையா...
கவலையை விடுங்கள்?

1 வருட Foundation Course உடன் விரும்பிய துறையில் பட்டதாரி ஆகுங்கள்!

Certificate / Diploma / Bachelors Degree in Business/IT/Engineering/Medicine/Arts
UK / Australia / New Zealand / Canada / Malaysian University Degree Pathways

கற்கைநெறிக்காலத்தில் பகுதிநேர
கற்கைநெறி நிறைவில் முழுநேர
வேலைவாய்ப்பு ஏற்பாடு!

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு STUDENT VISA WORK VISA ஏற்பாடு!

Rapid Preparatory Course for Foundation With English, IT, Personality Development & Career Counseling (3 months)
பெற்றோருடன் நேரில் வந்து விரிவான விளக்கம் பெற 28-12-2015 திங்கள் பி.ப.3மணி @ சிகரம் விரிவுரை மண்டபம்

SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams

இம்முறை O/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் இணையலாம்

மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk 0777 32 4004
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)





CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-3080)

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)



VCM INSTITUTE
மனோகராச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L 2018
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன்
ஆரம்பம் 30.12.2015 (புதன்) நண்பகல் 12.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(C-3063)



விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் (பெண்) வயது 18 - 30 உடன் தேவை.

குறிப்பு: யாழ் நகரை அண்டியவர்களாக இருக்க வேண்டும்.

தொடர்பு: 0775556904, 0779157883



BEACON வெலிங்டன் சந்தி. யாழ் நகர்.

வர்த்தகப் பிரிவு
யாழ் நகரின் சிறப்பான ஆசிரியர் குழாமுடன் நடைபெறுகின்றது.

A/L 2016, 2017 வகுப்புக்கள்
பொருளியல் : K.பிரதீபன்
கணக்கீடு : R.சுகிர்தன்
வணிகக்கல்வி : S.முகுந்தன் (CIMA முகுந்தன்)

அனுமதிகள் வழங்கப்படுகின்றது.



விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல63 சிவன் வடக்கு வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

தொழில் நுட்ப பிரிவு
A/L 2018
ஆரம்பம் 01.01.2016 - 8.30A.M
077 2487774
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

(C-3078)



INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the
Ministry of Telecommunication &
Digital Infrastructure

MPCS Building,
127, K.K.S. Road, Jaffna, Srilanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

JANUARY BATCHES
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 22.01.2016
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 23.01.2016

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer -
(சி-3047)



BA, B.Com, BBA, B.Sc
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான (2016 மார்கழி) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

- A/L இல் முழுமைச்சித்தி அடைந்தவர்களும், இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர். (General Marks அவசியமில்லை)
- BA இல் வரலாறு, பொருளியல், சமூக விஞ்ஞானம், அரச அறிவியல், தமிழ் இலக்கியம், ஆங்கிலம், Journalism + Mass Communication, பொதுநிர்வாகம் ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- B.Com, BBA தமிழ் மொழி மூலம் விண்ணப்பிக்க முடியும்.
- B.Sc இல் Maths, Computer Science, Psychology, Tourism + Hospitality Management ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- இக்கற்கைநெறிகளின் காலம் மூன்று ஆண்டுகளாகும்.
- பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பம் : 02-01-2016 காலை 8 மணி.
- மேற்படி பட்டநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.
- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்.

விபரங்கட்கு : யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்.
021 222 8148, 021 568 9477,
0778 469 721, 0773 144 762

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-3079)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.